Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2011

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




# கிறிஸ்தவ ஸ்தானாபதிகள்

ஸ்தானாபதியாகிய பவுல் • இந்த உலகத்தாராயிராதபடி

கிறிஸ்துவை நேர்மையோடு அடையாளப்படுத்தல் • ஆவிக்குரிய ஜீவியம்

உலகத்திற்கு கிறிஸ்துவை சுட்டிக்காட்டுதல் • நீதியும் மன்னிப்பும்

அதிகாரத்தைக் கனப்படுத்துதல் • முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனின் வருணனை

கிறிஸ்தவ ஸ்தானாபதிகள்

# ஆதியிலே



அந்நிய தேசத்திற்கு பிரதிநிதிகளாக அமர்த்தப்படுபவர்கள், பொதுவாக அந்த தேசத்தில் தங்கி, அவர்களின் பண்பாடுகளைக் கற்று, அத்தேசத்து ஜனங்களின் பிரச்சனைகளோடு இசைந்துவிடுவார்கள். எந்த அளவுக்கு அவர்கள் கற்றுக்கொள்கிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக மாறிவிடுவார்கள். மேலும், கடினமான சூழ்நிலைகளையும் வெகு எளிதில் சமாளித்துவிடுவார்கள். இந்த பிரதியில், கிறிஸ்துவின் பிரதிநிதிகள் என்பதன் பொருளைக் குறித்து ஆராய்ந்திருக்கிறோம். (2 கொரிந்தியர் 5:20) நம்முடைய குடியுரிமை பரலோகத்தில் உள்ளது. நம்முடைய வார்த்தைகள் மற்றும் கிரியைகள், தேவனையும், இயேசுவையும் இந்த உலகத்திற்கு அறிவிக்கக்கூடியதாக இருக்கிறது. (பிலிப்பியர் 3:20)

இராஜாக்களுக்கு முன்பாகவும், மனுஷருக்கு முன்பாகவும், அப்போஸ்தலனாகிய பவுல், எவ்வாறாக இயேசுவை வெற்றிகரமாக அறிக்கையிட்டார் என்பதை ***ஸ்தானாபதியாகிய பவுல்*** என்ற தலைப்போடு இப்பிரதி துவங்குகிறது. அவருடைய காலத்தில் கிரேக்கர்களுக்கு கிறிஸ்துவைக் குறித்து அறிவித்ததினால் வந்த மிகப்பெரிய பிரச்சனைகளை சாமர்த்தியமாகவும், துணிச்சலோடும் எதிர்த்து, முதலாம் நூற்றாண்டில் வெற்றிகரமாக புறஜாதியாரின் சபையை கட்டி எழுப்பினார்.

நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையில் வரும் பெருமளவான ஆபத்துக்கள் - இந்த உலகம், மாம்சம் மற்றும் பிசாசு - என்பதை ***இந்த உலகத்தாராயிராதபடி*** என்ற தலைப்பு எடுத்துரைக்கிறது. கிறிஸ்துவின் பிரதிநிதிகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வேறு எந்த விதமான பாதுகாப்பையும் பெறாததினால், எவ்வேளையிலும், ஆவிக்குரிய யுத்தத்திற்கு ஆயத்தநிலையில் தரித்திருக்கவேண்டும்.

***கிறிஸ்துவை நேர்மையோடு அடையாளப்படுத்துவதற்கு,*** வார்த்தை களிலும், கிரியைகளிலும் உண்மையாக இருப்பது மிக அவசியம். சத்தியத்தின் அறிவானது, எந்த விதமான சூழ்நிலை களிலும், கிறிஸ்தவர்களின் நற்செயலுக்கு கலங்கம் ஏற்படாதபடி, அவர்களை சரியாக வழிநடத்துவதற்குக் கொண்டுச் செல்லவேண்டும்.

பூமிக்குரிய பொறுப்புகளைப் பற்றி ***ஆவிக்குரிய ஜீவியம்*** என்ற தலைப்பு மேலோட்டமாக கண்ணோக்குகிறது. மற்றவர்களிடம் தொடர்பு கொள்ளும்போது புது சிருஷ்டிகள் சுய கட்டுப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். உலகப்பிரகாரமான காரியங்களுக்கும் ஆவிக்குரிய ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

கிறிஸ்தவர்கள் தங்களுடைய நேரத்தை ஒதுக்கி, ஞானமாக தங்களுடைய பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கு அழைக்கப்படுகிறார்கள். ***உலகத்திற்கு கிறிஸ்துவை சுட்டிக்காட்டுதல்*** என்ற தலைப்பு, சரியான முடிவுகள் எடுக்கவும், ஆவிக்குரிய வளர்ச்சிகளை வளர்த்து, உபத்திரவப்பட்டுக் கொண்டிருக்கும் மனுக்குலத்தினால் இலாபகரமான காரியங்களைப் பெற வழிநடத்தும்.

சிறந்த பிரதிநிதிகளாக இருப்பதற்கு, கிறிஸ்தவர்கள் தங்களுடைய கிறிஸ்துவ கூட்டாளிகளோடும், அயலகத்தாரோடும் தொடர்பு கொள்கையில் ***நீதியையும், மன்னிப்பையும்*** கட்டாயமாகக் காட்ட வேண்டும். மன்னியாத ஊழியக்காரனின் உவமையில், இரக்கத்தை செயல்படுத்துவதைப்பற்றி அநேக பாடங்கள் உள்ளது.

***அதிகாரத்தை கனப்படுத்துதல் என்ற தலைப்பு*** பற்றிய முறண்பாடுகளை, ஆவிக்குரிய கோட்பாடுகளைக் கொண்டு தீர்வு காணலாம். கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருக்கும் நாம் கட்டாயமாக இவ்வுலகத்தின் அரசியலில் எவ்விதமான சம்மந்தமும் வைத்துக்கொள்ள கூடாது. ஆயினும், இந்த தேசத்தின் சட்டங்களைக் கடைப்பிடிப்பதில் நாம் நல்ல மாதிரிகளாகத் திகழவேண்டும்.

1924-ம் வருடம் வெளியிடப்பட்ட ஹெரால்டிருந்து ***முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனின் வருணணை*** யோடு இந்த பிரதி முடிவு பெறுகிறது. பயம் நிறைந்த இந்த முழு உலகத்திற்கு கிறிஸ்துவை அடையாளப்படுத் துவதே கிறிஸ்துவ ஜீவியத்தின் மகிழ்ச்சியாக இருக்கிறது. நம்முடைய நம்பிக்கைகள் நிறைவேறும் காலத்திற்கும், இந்த உலகத்தின் வேதனைகள் இறுதியாக முடிவடையும் காலத்திற்கு பின் நடக்ககூடிய காரியங்களைக் காண்பதற்கு, நாம் பெற்ற அறிவும், அனுபவமும் உதவி செய்யும்.

## ஜூலை-ஆகஸ்ட்

**ஆதியிலே (கிறிஸ்துவின் ஸ்தானாபதி) . . .** 33

**ஸ்தானாபதியாகிய பவுல். . . . .** 34

கிறிஸ்துவின் சிறந்த பிரதிநிதி செயலாற்ற வேண்டிய முக்கிய பொறுப்புகளை, அப்போஸ்தலனாகிய பவுல் காட்டுகிறார்.

**இந்த உலகத்தாராயிராதபடி . . . . . .** 38

ஒரு எதிரியின் தேசத்தில் நாம் பிரதிநிதிகளாக இருக்கிறோம். இந்த தேசம் நம்மை மேற்கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

**கிறிஸ்துவை நேர்மையோடு அடையாளப்படுத்தல் . . .** 41

தேவனுடைய பிரதிநிதிகள் நேர்மையின் உச்சக்கட்ட நிலையில் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஆவிக்குரிய ஜீவியம். . . . . . . .** 44

சிறந்த பிரதிநிதிகளாக இருப்பதற்கு, இந்த உலகத்தில் நம்முடைய நடத்தை மிகவும் இக்கட்டான சூழ்நிலையிலுள்ளது.

**உலகத்திற்கு கிறிஸ்துவை சுட்டிக்காட்டுதல் . . . . .** 47

நம்முடைய வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும் நாம் ஜனங்களை மதிப்பிடுகிறோம் என்பதை காட்டினால் மட்டுமே நாம் ஒரு சிறந்த பிரதிநிதிகளாக இருக்கமுடியும்.

**நீதியும் மன்னிப்பும் . . . .** 50

தேவனை போலிருப்பவர்களுக்கு இரக்கமே ஒரு சிறந்த தரக்குறியீடாக விளங்குகிறது.

**அதிகாரத்தைக் கனப்படுத்துதல் . . . .** 53

மதசார்பற்ற அதிகாரிகள் தேவனுடைய பிள்ளைகளுக்கு சமாதானமான ஒரு சுற்றுப்புறத்தைக் கொடுக்க முடிகிறது.

**முழு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவனின் வருணணை . . .** 57

தங்களுடைய வாழ்க்கையின் எல்லாவித சூழ்நிலைகளிலும், மகிழ்ச்சியாக இருப்பதே தேவனால் அழைக்கப்பட்டவர்கள் பெற்ற பாக்கியம்.



தனித்து நிற்கும்

# ஸ்தானாபதியாகிய பவுல்

*ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக் கொள்ளுகிறோம் - 2 கொரிந்தியர் 5:20*

**David Stein**

இயேசுவின் சீஷர்களில், அப்போஸ்தலனாகிய பவுலைப் பற்றி மட்டுமே அநேக காரியங்கள் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய வைராக்கியம், அறிவு, கிரியைகள் மற்றும் அவரின் ஜீவபலியானது, கிறிஸ்துவ வாழ்க்கைக்கு விதிவிலக்கான சிறந்த ஒரு மாதிரியை முன் வைக்கிறது. கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்களிடம் பவுல் காட்டின அன்பும், பக்தியும் அவரை தனித்து நிற்க வைத்து - இயேசுவை பின்பற்றும் அனைவருக்கும் ஒரு நல்ல எடுத்துகாட்டானது. புறஜாதிகளிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களை கூட்டிச் சேர்ப்பதற்கு பவுலின் பொது ஊழியம் ஒரு திறவுகோலாக அமைந்தது. பரலோக இராஜ்யத்தைக் குறித்த பவுலின் பிரதிநிதிக்குரிய சிறப்பான எடுத்துக்காட்டுகளும், ஆதிசபைக்கு அவர் கொடுத்த கட்டளைகளும், அப்போஸ்தலரின் புத்தகத்தில் மிகத் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

தொலைத் தொடர்பு முறைகள் வேறுபட்டதினால், இக்காலத்து பிரதிநிதிகளின் தனி மனித கடமைகளைக் காட்டிலும் வேதாகம நாட்களில் இருந்த பிரதிநிதிகளின் தனி மனித கடமைகள் கடினமான இக்கட்டான சூழ்நிலைகளைக் கொண்டிருந்தது, இன்றைய தினங்களில் சில அவசரமான தகவல்களைப் பெறுவதற்கும், தெரிவிக்கவும், அவர்கள் தேசத்திலிருந்து கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளவும் உடனடியாக தொடர்பு கொள்ளலாம். ஆனால், பண்டைய காலங்களில் இப்படிப்பட்ட தொலை தொடர்புகள் குறைவாயிருந்ததினால் ஒரு பிரதிநிதி தானே முடிவுகளை எடுத்துக்கொள்வார். ஆகையால் ஒரு பிரதிநிதியை தேர்வு செய்யும் போது அந்த நாட்டு இராஜா அல்லது முக்கியஸ்தர், மிக கவனத்தோடும், எச்சரிப்போடும் தேர்வு செய்தார். தேர்வு செய்யப்பட்ட அந்த பிரதிநிதி ஆட்சியாளரின் இருதயத்தையும், அவருடைய சிந்தையையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். அரசரின் திட்டத்தையும் நோக்கத்தையும் நன்கு புரிந்துகொண்டிருக்கவேண்டும். அவர் அனுப்பப்படும் இடங்களில் தன்னை ஒரு ராஜாவாக வெளிப்படுத்துவதற்கு மிகுந்த திறமையுள்ளவராயிருக்க வேண்டும். இப்படியாக மொத்தத்தில் அனுப்பப்படும் பிரதிநிதி தன்னுடைய அரசாங்கத்துக்கும் அவர் அனுப்பப்படும் நாட்டின் ஜனத்திற்கும், ஆளுநர்களுக்கும் நல்ல ஒரு சமாதான உறவை ஏற்படுத்த வேண்டும் என்பதே பிரதிநிதியின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்.

முக்கியமாக, ஒரு தூதுவர் மற்ற தேசத்தின் குடிமகனாயிருக்கிறார். தன்னைக் குறித்து பேசும் போதும் பவுல் இதைத் தெளிவாக விளக்கினார். "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்" (பிலப்பியர் 3:20) தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்களுக்கும் இது பொருந்தும். "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" (கொலொசேயர் 1:13)

### ஸ்தானாபதியின் தகுதிகள்

பவுல் இந்த உலகத்தில் தேவனையும், கிறிஸ்துவையும் வெளிப்படுத்தினார். இராஜாக்களுக்கு முன்பாகவும், பொது ஜனங்களுக்கு முன்பாகவும், அவருடைய வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும், அவருடைய பரலோக பிதாவை பிரதிபலித்தார். அவருடைய சத்தியத்தின் ஆலோசனையினால், எண்ணிக்கைக்கு அடங்காத ஜனங்கள் இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனோடு ஐக்கியப்பட்டார்கள். இப்பொழுது ஒரு நல்ல பிரதிநிதியின் குணலட்சணங்களைக் குறித்து பார்க்கலாம். மேலும் பவுல் தன்னுடைய ஊழியத்தில், இந்த குணங்களை எவ்வாறு பிரதிபலித்தார் என்றும் பார்க்கலாம்.

### பொறுமை

சூழ்நிலைகளையும், தேவைகளையும் முழுமையாக புரிந்துகொள்வதற்கு தன்னுடைய தேசத்தைப் பற்றியும், அவர் குடியேறின தேசத்தைப் பற்றியும் மிக கவனமாக முதலில் அறிந்துகொள்ள வேண்டும். இந்த இரு தேசத்தார் மத்தியில் பிரச்சனைகள் ஏற்படும் பட்சத்தில் இருவருக்கும் அல்லது இரு தேசத்தாருக்கும் சரியான புரிந்து கொள்ளுதலை கொண்டுவருவதற்கும் முயற்சிக்க வேண்டும். பவுல் காவலில் இருந்தபோதும் அவருடைய பொறுமையும், அவருடைய தாழ்மையும், அர்ப்பணிப்பும் மிகுதியாகக் காணப்பட்டது. இராஜாக்கள் சத்தியத்தைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு அவர்களோடு பவுல் சம்பாஷித்தார்.

**ஞானம்**

ஒரு பிரதிநிதி தன்னுடைய அறிவை பயன்படுத்தி பிரச்சனைகளில் இருக்கும் ஜனங்களை வெளியில் கொண்டு வருவார், கூடுமானால் அனைவரும் ஒரு நல்ல முடிவுக்கு வர வழிவகுப்பார். ஒரு பொதுவான அடிப்படையில் சம்பாஷிப்பதற்கு கண்ணோக்கமாயிருப்பார். யூதர்கள் மற்றும் கிரேக்கர்களின் கூட்டத்தில் இராஜாக்களுக்கு முன்பாக பவுல் இப்படிப்பட்ட ஞானத்தைப் பயன்படுத்தினார்.

**கனிவான பேச்சு**

ஒரு பிரதிநிதி தன்னுடைய தேசத்தின் பேச்சாளராய் இருப்பதினால், மற்றவர்களை குற்றப்படுத்தாமல் ஊக்குவிக்கும்படி மென்மையாக பேச வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் மற்றவர்களின் நன்மையைக் குறித்து அனைவருக்கும் முன்பாகப் பேசினார். (1கொரிந்தியர் 10:32, 33, அப்போஸ்தலர் 17:22)

**தயாள குணம்**

ஒரு பிரதிநிதி மற்றவர்களுடைய விருப்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு உதவும்படி தன்னுடைய நேரத்தையும், திறமைகளையும் அவர் பயன்படுத்துவார். இப்படியாக, அவருடைய தேசத்தின் காரியங்களை அறிவிக்கிறவராயிருப்பார். அதுபோல, பவுலும் தன்னுடைய ஜீவனை தேவனுடைய இராஜ்யத்திற்காக பலி செலுத்தினார். (பிலிப்பியர் 2:4)

**காரணமில்லாத நிலை**

ஒரு பிரதிநிதி - தான் வந்த தேசத்திலுள்ளவர்களுக்கு அநேக உதவிகளைச் செய்து, தம்முடைய ஆலோசனையினால் வரக்கூடிய நன்மைகளைப் புரியவைக்க முயற்சிப்பார். அவர்கள் ஏற்றுக்கொள்ளு மளவுக்கு, கிறிஸ்துவின் இராஜ்யத்தைக் குறித்தும் அதினால் அனைவரும் பெறக் கூடிய ஆசீர்வாதங்களைக் குறித்தும் பவுல் மற்றவர்களிடம் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருந்தார்.

**உண்மை**

ஒரு பிரதிநிதி உண்மையை மட்டும் பேசி, தான் சொல்லவேண்டிய கருத்துக்களைப் புரியவைப்பார். தன்னுடைய வழிக்கு மற்றவர்களைக் கொண்டு வருவதற்கும் அவர் ஒருவரையும் வஞ்சிப்பதுமில்லை, எதையும் அதிகபட்சமாய் பேசுவதுமில்லை. பவுல் எல்லா நேரத்திலும் உண்மையாக நடந்துகொண்டார். (பேதுரு தகாதவிதமாய் நடந்து கொண்டபோது பவுல் நேரடியாக எச்சரித்தார்.) (கலாத்தியர் 2:11-14.)

**மனதில் என்றும் ஆயத்த நிலை**

தன்னுடைய அரசாங்கத்தைப் பற்றிய காரியங்களை அறிவிப்பதற்கு கிடைக்கக்கூடிய ஒவ்வொரு வாய்ப்புகளையும் பயன்படுத்துவதற்கு ஒரு பிரதிநிதி எப்பொழுதும் ஆயத்தமாயிருப்பார். சவால்களுக்கும், சோதனைகளுக்கும், பிரச்சனைகளுக்கும் அவர் என்றுமே பின்வாங்குவதில்லை. கிறிஸ்துவையும் அவருடைய இராஜ்யத்தையும் குறித்து பிரசங்கிக்கக் கூடிய எந்த வாய்ப்பையும் அவர் இழக்கவில்லை.

**மனத்தாழ்மை**

ஒரு பிரதிநிதிகளுக்குத் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான அதிகாரமும் கொடுக்கப்பட வில்லை என்று அவர் நன்கு அறிந்திருக்கிறார். மேலும், அவர் தன்னுடைய சொந்த தேசத்தின் சட்டத்திட்டங்களையும் நியாயங்களையும் சரியான முறையில் எடுத்துரைப்பார். ஆதி சபையை வழி நடத்தக் கூடிய வெளிச்சமாக பவுல் இருந்தாலும், அப்போஸ்தலர்களில் கடைசி என்று தன்னை தாழ்த்தினார். (1கொரிந்தியர் 15:9, எபேசியர் 3:8, பிலிப்பியர் 2:3)

**இராஜாக்களுக்கு முன்பாக**

ரோம அரசாங்கத்தினால் யூதேயாவில் காரியஸ்தராகிய பேலிக்ஸ்க்கு முன்பாக பவுல் நின்றார். (அப்போஸ்தலர் 24) சத்தியத்திற்கு எதிராயிருந்த போது மகிமையடைந்த இயேசுவை அவர் அற்புதமாக கண்டவிதத்தையும், அவருடைய பார்வை மீண்டும் கிடைக்கப்பெற்ற விதத்தையும், தனிப்பட்ட முறையில் சில வருடங்கள் அவர் சத்தியத்தைத் தியானித்ததையும் விவரித்தார். அதற்குபின் பலவருடங்களாய் அநேக எதிர்ப்புகளை சந்தித்தும் விசுவாசத்தோடு இராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவித்தார். பின்பு, அவர் எருசலேமுக்குச் சென்ற போது காவலில் வைக்கப்பட்டார். அப்பொழுது இராஜ்யத்தின் உபதேசத்தைக் கொண்ட முக்கியப் பகுதியான உயிர்த்தெழுதலைக் குறித்து அந்த பேலிக்ஸ்க்கு முன்பாக பிரசங்கித்து, பவுல் தன்னை தான் காத்துக் கொண்டார். "நீதிமான்களும் அநீதிமான் களுமாகிய மரித்தோர் உயிர்தெழுந்திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கை கொண்டிருக்கிறதுபோல, நானும் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்." (அப்போஸ்தலர் 24:15)

தேவனுடைய இராஜ்யத்தின் முக்கிய அம்சமாகிய உயிர்த்தெழுதலின் சத்தியத்தைக் குறித்து மட்டுமே அறிக்கையிடாமல் தன்னைக் காத்துக் கொள்ளவும் பயன்படுத்தினார். தன்னுடைய எதிராளிகள் உயிர்த்தெழுதலில் சத்தியத்தைக் குறித்து இரண்டு எதிரிடையான பிரிவினர்களாக இருந்ததை பேலிக்ஸ்க்கு முன்பாக காண்பிக்க விரும்பினார். ஆகவே, இந்த வாக்குவாதங்கள் தேச துரோகமானவை களல்லவென்றும், யூத மத போதகர்களுக்கும் தனக்கும் இடையில் சாதாரண உபதேசத்தைக் குறித்த தர்க்கங்கள் என்றும் எளிதில் புரியவைத்தார். கிறிஸ்துவின் இராஜ்யத்துக்குரிய பிரதிநிதியாக அவர் இருந்ததினால், "உயிர்த்தெழுதல்" என்ற நற்செய்தி கேட்போரின் காதுகளுக்குள் ஒரு உணர்ச்சிகரமான செயலை ஏற்படுத்தியிருக்கும். ஆனால், அவர்களது விசுவாசம் தளர்ந்திருந்ததினால் அந்த சத்தியத்திலி

ருக்கும் உண்மைகளையும் அதன் அருமையான அம்சங்களைக் குறித்தும் புரிந்து கொள்ள முடியவில்லை.

பேலிக்ஸின் எண்ணங்கள் சுயநலமாயிருந்தது. பவுலின் அநேக செய்திகளை அவன் கேட்டபோதும் அவன் பவுலை இரண்டு வருஷம் வீட்டுக் காலவில் வைத்தான். பேலிக்ஸ் யூதர்களுக்கு சாதகமாய் நடந்தான். பவுலை விடுவிக்க அவர் பணம் கொடுக்க வேண்டுமென்று எதிர்பார்த்திருக்ககூடும். (அப்போஸ்தலர் 24:26) இறுதியாக பேலிக்ஸ் சென்றபின், புதிய காரியதரிசியாகிய பெஸ்து நியமிக்கப்பட்டான். பவுலின் எதிரிகள் அவரை கொல்லவேண்டும் என்ற முயற்சியில் ஓயவில்லை. அந்த காரியதரிசிக்கு முன்பாக பவுல் மீண்டுமாக தன்னைக் காத்துக் கொண்டார். தன்னுடைய ஊழியத்தை உண்மையோடு செயல்படுத்துவதாக பெஸ்துவுக்கு உறுதியளித்தார் "அதற்கு அவன் உத்தரவாக: நான் யூதருடைய வேதப்பிரமாணத்துக்காகிலும், தேவாலயத்துக்காகிலும், இராயருக்காகிலும் விரோதமாக ஒரு குற்றமும் செய்யவில்லையென்று சொன்னான்" (அப்போஸ்தலர் 25:8)

அகிரிப்பா இராஜா பெஸ்துவைக் காண வந்தபோது இயேசுவின் பணிக்கு பவுல் அற்புதமாய் வந்த விதத்தை இருவரிடம் அறிக்கையிட்டு தன்னைக் காத்துக் கொண்டார். " இப்பொழுது நீ எழுந்து, காலூன்றிநில். நீ கண்டவைகளையும் நான் உனக்குத் தரிசனமாகிக் காண்பிக்கப்போகிறவைகளையும் குறித்து உன்னை ஊழியக்காரனாகவும் சாட்சியாகவும் ஏற்படுத்துகிறதற்காக உனக்குத் தரிசனமானேன். உன் சுய ஜனத்தாரிடத்தினின்றும் அந்நிய ஜனத்தாரிடத்தினின்றும் உன்னை விடுதலையாக்கி, அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார்" (அப்போஸ்தலர் 26:16-18)

கிறிஸ்து எழும்பினது முதல் அவர் செய்த பணிகளையும், அதினால் யூதர்களில் சிலருக்கு ஏற்பட்ட பகையையும், இதன் காரணமாக அவர்கள் பவுலைக் கொலை செய்வதற்கு வகை தேடிக் கொண்டிருப்பதையும், பவுல் விவரித்தார். மிக அருமையான ஒரு சொற்பொழிவாக இது இருந்திருக்க வேண்டும். ஏனெனில் "இவ்விதமாய் அவன் தனக்காக உத்தரவு சொல்லுகையில், பெஸ்து உரத்த சத்தமாய்: பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது "(அப்போஸ்தலர் 26:24) என்று பெஸ்து கூறினான். ஆயினும் அகிரிப்பா இராஜா யூத தேசத்தை சேர்ந்தவனாயிருந்த போதிலும் "அகிரிப்பா பவுலை நோக்கி: நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய் "(அப்போஸ்தலர் 26:28) என்று கூறினான்.

இந்த சம்பாஷணைகளின் பலனாக பவுல் நிரபராதி என்று அறிவிக்கப்பட்டார். ஆனால், பவுலின் வேண்டுகோளின்படி, அவர் சீசருக்கு முன்பாக நிறுத்தப்பட்டார். அவர் சீசரிடம் பேசினகாரியங்கள் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் - "பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்குமுன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் "(அப்போஸ்தலர் 27:24) என்று நாம் வாசிக்கிறோம். தேவனுடைய இராஜ்யத்தின் பிரதானமான பிரதிநிதி பண்டைய உலகத்தின் பிரதானமான ஆட்சியாளருக்கு முன்பாக நிற்பதை, சற்று சிந்தித்துப் பாருங்கள்! அங்கு நடந்த சம்பாஷணைகளை அறிந்துகொள்ள நாம் எவ்வளவு ஆர்வமாய் இருக்கிறோம். இந்த உலகத்தின் இராஜாக்களுக்கு முன்பாக அப்போஸ்தலனாகிய பவுல் உண்மையில் ஒரு கிறிஸ்துவின் மிகச் சிறந்த பிரதிநிதியாக மேன்மையான சாட்சியளித்தார்.

பவுலை போல இந்த சுவிசேஷ யுக முழுவதிலும் தங்களை அர்ப்பணித்த கிறிஸ்தவர்கலில் இந்த உலகத்தின் அரசியல் மற்றும் மதத்தலைவர்களுக்கு முன்பாக நின்றவர்கள் ஒருவருமில்லை. துவக்கத்தில் நடந்தது போலவே இந்த யுகத்தின் முடிவில் நடக்குமென்று வசனங்கள் குறிப்பிடுகிறது. எவ்வாறு நடைபெறும் என்றும், இந்த செயல்கள் எப்படியாக துரிதப்படுத்தப்படுமென்று நமக்கு எந்த விதமான குறிப்புமில்லை. இந்த வாய்ப்பு நமக்கு கிடைக்கக்கூடுமா? கிடைக்கும் என்று நம்பலாம். அப்போது அப்போஸ்தலனாகிய பவுலைப்போல தைரியத்தோடும், வைராக்கியத்தோடும் இராஜ்யத்தின் பிரதிநிதிகளாய் நம்முடைய பரலோக குடியுரிமையை அறிக்கையிடுவோம். "இந்தத் தீங்குகளையெல்லாம் தங்களுக்கு நேரிடப்பண்ணுவேன் என்று கர்த்தராகிய நான் விருதாவாய்ச்சொன்னதில்லையென்று அறிந்து கொள்வார்கள்." (எசேக்கியேல் 6:10) என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி எழுதியபடி நாம் அப்போஸ்தலனாகிய பவுலைப் போல சாட்சிகளாய், துன்பங்களை அனுபவிப்பது நம்முடைய தேவனுக்கு மகிமையாயிருக்கும்.

**மத்தியஸ்தராகிய ஸ்தானாபதி**

யூதர்களையும், புறஜாதியாரையும் கிறிஸ்துவுக்குள் ஐக்கியப்படுத்துவதே பவுலின் மிகமுக்கிய பணியாய் இருந்தது. மேலும், கிறிஸ்துவை பின்பற்றிய மற்ற பிரதிநிதிகளுக்கும் எடுத்துக்காட்டாய் இருந்தார். பவுலின் இந்த விசேஷித்த பணியைக் குறித்து எபேசியரின் புஸ்தகம் முழுவதும் தெளிவாக விவரிக்கிறது.

யூதர்கள் மற்றும் புறஜாதியார்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால், தேவனுக்குள் சமாதானமாய்

இருப்பதைக் குறித்து இரண்டாம் அதிகாரம் முழுவதும் எழுதியுள்ளார். இந்த விளக்கத்தின் அடிப்படையில் மத்தியஸ்தரின் பொறுப்பை மூன்றாம் அதிகாரத்தில் தொடர்ந்து எழுதினார் -

" இதினிமித்தம், பவுலாகிய நான் புறஜாதியாரா யிருக்கிற உங்கள்பொருட்டுக் கிறிஸ்து இயேசு வினிமித்தம் கட்டுண்டவனாயிருக்கிறேன். " - வசனம் 1

"உங்களுக்காக எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தெய்வகிருபைக்குரிய நியமமும் இன்னதென்று கேட்டிருப்பீர்களே " - வசனம் 2

" இந்த இரகசியம் இப்பொழுது அவருடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதுபோல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப் படவில்லை. " - வசனம் 6

"பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. " - வசனம் 8

" அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது. "- வசனம் 12

தனித்திருந்தவர்களை ஐக்கியப்படுத்துவதை, மேல் கூறப்பட்ட ஒவ்வொரு வசனப்பகுதியும் காட்டுகிறது. இதுவே தேவன் பவுலுக்கு நியமித்த ஊழியமாய் இருந்தது. பவுலின் இந்தப் பணிக்கு இதுவே, நற்செய்தியாகவும் இருந்தது. தேவனுடைய ஆவியின் வல்லமையுள்ள செயல்பாடே இந்த அற்புதமான பலனைத்தந்தது. "பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார். அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம். ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்;" (எபேசியர் 2:16-19)

உயிர்த்தெழுந்த இயேசு யூதருக்கும், புறஜாதியாருக்கும் இடையில் "சமாதானமானார்". பூமியில் உள்ள யூதர்கள் அல்லாத அனைவரையும் புறஜாதிகள் என்று கருதப்படும் பட்சத்தில் கிறிஸ்துவின் ஈடுபலியின் வல்லமை மீண்டும் இந்த உலகம் முழுவதற்கும் செயல்படுகிறது. பாபேல் கோபுரம் கட்டப்படுகையில் பாஷைகள் பிரிக்கப்பட்டபோது வெளிப்பட்ட மிகப்பெரிய சுபாவம் மாற்றப்படும். இங்கு தங்களுடைய நாமம் மேன்மைப் படுவதற்கான காரியங்களை முயற்சித்த, தேவனுக்கு எதிராக பாவம் செய்தபோது பல ஜாதிகள் பிறந்தது. (ஆதியாகமம் 11:4) இப்பொழுது தேவனுடைய நாமத்தையும், இயேசுவின் நாமத்தையும் ஒருமித்து அறிக்கையிடுகையில், பாபேல் கோபுரம், கட்டப் படுகையில் நடப்பிக்கப்பட்ட குற்றமானது திருத்தப் படுவதைக் காணலாம். அதாவது சபை துவங்கி இந்த உலகம் முழுவதும் ஒருமித்த கருத்தோடு இசைந்து இருக்கையில், பிரிந்த அனைத்தும் மீண்டும் சேர்க்கப்படும். முந்தைய யுகத்தில் இக்காரியம் ஒரு இரகசியமாய் மறைக்கப்பட்டு இருந்தது. ஆனால், இப்பொழுதோ, பவுலின் மூலமாக அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டது.

அப்போஸ்தலர் என்பதற்கு "அனுப்பப்பட்டவர்கள்" என்று பொருள். இதற்கு பிரதிநிதிகள் என்றும் அர்த்தம் கொள்ளலாம். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை "..... சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதி....." (எபேசியர் 6:20) என்று தன்னைக் குறிப்பிடுகிறார். இன்றைய பிரதிநிதிகளை இவ்வாறாக காண்பது மிக அரிது. மற்றவர்களின் அனுதாபத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பவுல் இவ்வாறு கூறவில்லை. மாறாக, பாடுகளினிமித்தம் சபை வகுப்பார் நம்பிக்கை இழக்காமல் மகிமைக்காக அவைகளைச் சகித்துக் கொள்வதற்காக இப்படிக் கூறினார். உண்மையில் அவர் ஒரு சிறந்த பிரதிநிதியாகச் செயல்பட்டார். நாமும், இப்படியாக செயல்பட வேண்டுமென்றும் கூறுகிறார். (2 கொரிந்தியர் 5:20) நாம் இப்பொழுது, இப்படிப்பட்ட மத்தியஸ்தரின் ஊழியத்தைச் செய்வதற்கான சிறந்த ஒரு மாதிரியை பவுல் நமக்கு முன்வைத்திருக்கிறார். இந்த உலகத்தில் கிறிஸ்துவைப் போல செயல்படும் போது, விடுதலையை எதிர்பார்க்கும் இந்த உலகத்திற்கு சில உதவிகளும் ஆறுதல்களும் கிடைக்கிறது." உண்மையுள்ள ஸ்தானாபதியோ ஒளஷதம் " (நீதிமொழிகள் 13:17) நாம் இப்பொழுது இந்த காரியத்தை முழு உற்சாகத்தோடு செய்யும் பட்சத்தில் வருங்காலத்தில் பிரதிநிதிகளாய் அல்ல, இராஜாக்களும் ஆசாரியர்களுமாய் இருந்து, இயேசுவோடுகூட இந்த முழு மனுக்குலத்தையும் தேவனோடு ஒப்புரவாக்குவதற்கு நம்மை ஆயத்தப்படுத்தும். நாம் எப்பேர்ப்பட்ட நம்பிக்கையைக் கொண்டிருக்கிறோம், கிறிஸ்துவின் விசேஷித்த பிரதிநிதியாக செயல்பட்டவரின் மாதிரிக்கு ஏற்றவாறு நாம் நெருங்கி அவரைப் பின்பற்ற முயற்சிப்போமாக.

# இந்த உலகத்தாராயிராதபடி



*"ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" -1யோவான் 2:16*

**Joe Megacz**

நம்முடைய நாட்களில், அருகாமையிலுள்ள நட்பு நாட்டிற்கு ஒரு பிரதிநிதி அனுப்பப்பட்டால், அவருடைய வேலை சுலபமாக நடைபெறும். அங்குள்ள பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் அவர் அனுபவிக்கலாம். அந்த நாட்டின் வரலாற்றையும் பழக்கவழக்கங்களையும் அவர் கற்றறியலாம். ஒருவேளை அவருடைய குழந்தைகள் அங்குள்ள பள்ளிக்குச் சென்று, அங்குள்ள மொழிகளைக் கற்று, அநேக சிநேகிதர்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். ஆனால் ஒருவேளை அந்த பிரதிநிதி எதிரியின் நாட்டுக்கு அனுப்பட்டால், அவருடைய வேலைகள் கடினமாக இருக்கும். அந்த எதிராளி நாட்டின் அரசாங்கத்துக்கும் அதின் தலைவர்களுக்கும் சற்று விலகி இருத்தல் வேண்டும். இருதேசத்துக்கும் மத்தியில் ஒரு சமாதான உறவை ஏற்படுத்த பொதுவான காரியங்களைக் கண்டுபிடிக்கவேண்டும். இதற்கிடையில் தனது சொந்த பாதுகாப்பையும், நலத்தையும் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். ஒருவேளை எங்கு சென்றாலும் தம்முடைய பாதுகாப்பு படைகளோடு செல்ல வேண்டியதாய் இருக்கும். அந்த தேசம் மற்றும் ஜனத்தினின்றும் அவர் தனித்திருக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பிரதிநிதிகள் (2 கொரிந்தியர் 5:20) ஒரு எதிராளியின் நாட்டிற்கு அனுப்பப்பட்ட பிரதிநிதியைக் காட்டிலும் நம்முடைய சூழ்நிலை மேலும் கொடியதாய் உள்ளது. இந்த உலகத்தின் அதிபதியாகிய சாத்தானுக்கும் நம்முடைய இராஜாவாகிய இயேசுவுக்கும் இடையில் சமாதான உறவை ஏற்படுத்துவதற்கு எந்தவித பொதுவான காரியமும் இல்லை என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். நம்முடைய எதிராளிகள் நித்தமும் நம்மை தோற்கடிக்க முயற்சித்து, கூடுமானால் ஆவிக்குரிய நிலையில் நம்மை அழித்தும் விடுவார்கள். ஆயினும், நாம் இங்கு இருப்பதினால் நம்முடைய ஆண்டவரின் வேலைகள் முடிவு பெறும்வரைக்கும், இங்கு தரித்திருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். நம்முடைய சூழ்நிலையை பவுல் இவ்வாறாக விவரிக்கிறார் - "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை; வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம்" (எபிரெயர் 13:14) ஆகவே நம்முடைய நித்தியமான பரலோக வீட்டிற்கு செல்லும் காலம் வரைக்கும் வரவேற்கப்படாத, அந்நியர்களாக இவ்வுலகத்தில் வாழவேண்டியது அவசியம்.

நீண்ட காலமாக அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் மூன்று முக்கிய எதிராளிகள் - உலகம், மாம்சம், பிசாசு - இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ந்து, நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ளும் வழிகளைக் காண்போம்.

**நம்முடைய முதல் எதிரி :- உலகம்**

அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய சக பிரதிநிதிகளுக்கு ஒரு உறுதியான எச்சரிப்பைக் கொடுத்தார். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1யோவான் 2:15) இந்த உலகத்தில் அநேக நன்மையான காரியங்களும் நியாயமான காரியங்களும் உண்டு. மேலும், மற்றவர்களின் தேவைகளுக்கு உதவிசெய்யக்கூடிய மேன்மையான மக்களும் இந்த உலகத்தில் உள்ளனர். அவர்கள் நேரத்தையும் பணத்தையும் செலவழிக்கிறார்கள். மனிதாபிமானம் உள்ள ஐசுவரியவான்கள், கல்வியறிவு இல்லாதவர்களுக்கு கல்வியும், பசித்தோருக்கு ஆகாரத்தையும், உடல் நலன் அற்றோருக்கு வைத்தியமும் செய்வதற்கு தங்களுடைய ஆஸ்தியின் ஒரு பகுதியை செலவழிக்கிறார்கள். இப்படிப்பட்ட விதிவிலக்கான சிலரைத் தவிர, பொதுவாக மனுக்குலம் சுயநலத்திலும் பெருமையிலும் நிறைந்துள்ளது. இப்படிப்பட்ட ஆவிக்கு விரோதமாக யோவான் நம்மை எச்சரிக்கிறார்." இவ்வுலகத்தில் அன்புகூறாதிருங்கள்" "எனக்கே முதலிடம், எனக்கே உரியது" என்று இந்த உலகத்தின் சட்டத்தை சுருக்கமாகக் கூறலாம். இப்படியாக, இந்த முதல் வழியில் நம்மை உலகம் எதிர்க்கிறது.

இதற்கு எதிரிடையாக ஒரு கிறிஸ்துவின் பிரதிநிதி, உலகத்தின் சட்டத்திற்குக் கீழ்ப்படியவோ பின்பற்றவோ கூடாது. ஆனால், நாம் சட்டத்திற்கு புறம்பாகவும் காணப்படக்கூடாது. அன்பின் பிரமாணமாகிய தொகுக்கப்பட்டிருக்கும் தேவனுடைய பிரமாணத்தை நாம் பின்பற்றி இருக்கவேண்டும். "அவன் பிரதியுத்தரமாக: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (லூக்கா 10 :27) என்று இயேசு மிக அழகாக வெளிப்படுத்தினார். பெருமை பாராட்டி, சுயநலமாக இருக்கக்கூடிய இந்த உலக ஆவிக்கு எதிராக தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் நம்முடைய சகோதரருக்கும் பணி செய்யக்கூடிய மனநிலைமையை நம்முடைய சிந்தையில் நாம் அதிகமாய் வளர்த்துக் கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட தொடர்ச்சியான சிந்தனை, நம்முடைய இருதயத்தில் நிரப்பப்படும் போது இந்த உலகத்தின் ஆவியாகிய பெருமை மற்றும் சுயநலத்திலிருந்து நாம் நிச்சயமாக விடுப்படலாம். இதைக் குறித்து நம்மை நாம் ஆராய்ந்து பார்க்கலாம். நாம் மற்றவர்களுக்காக சிந்தித்து செயல்பட கூடிய காரியங்களையும் நம்மை

பற்றியும், நம்முடைய தேவைகளைப் பற்றியும் சிந்தித்து செயல்படக்கூடிய காரியங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். நாம் எத்தனைப் பேருக்கு உண்மையில் உதவி செய்தோம் என்று நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும்.

அடுத்து, இந்த உலகத்தின் ஒழுக்கக் கேடுகள் நம்மை எதிர்க்கிறது. சமுதாயத்தில் ஒழுக்கம் என்பது நாளுக்குநாள் குறைந்து கொண்டு வருகிறது. போதைப் பொருள், பலாத்காரம் மற்றும் பலவிதமான மூர்க்கங்கள் சமுதாயத்தில் காணப்படுகிறது. இந்நாளில் இக்காரியங்களை அநேகர் விரும்பி நடப்பிக்கிறார்கள். ஒரு காலத்தில் இரகசியமாக மறைத்து செய்த காரியங்கள் இப்பொழுது பகிரங்கமாக செய்யப்படுகிறது. மேலும், அநேகர் இவைகளை ஆதரித்து, மதிப்பு மரியாதையற்றவைகளை மதிப்புக்குரியதாக ஊடகங்கள் மூலம் ஊக்குவிக்கிறார்கள்.

இந்த உலகத்தின் நிலைக்கு எதிரான ஜீவியத்தை ஒரு கிறிஸ்தவன் ஜீவிக்க வேண்டும். வேகமாக ஓடக்கூடிய, மிகப்பெரிய நதியில் ஒரு மீன் எதிர்நீச்சல் போடுவதைப்போல ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய வாழ்க்கை முறையை பத்து கற்பனைகளில் குறிப்பிட்டது போலவும், நம்முடைய ஆண்டவருடைய, அப்போஸ்தலரின் போதகங்கள் மற்றும் அவர்கள் வாழ்க்கையில் உள்ள எடுத்துக்காட்டுகளுக்கு ஒப்பான ஜீவியத்தை ஜீவிக்கவேண்டும். தாங்கள் பெற்ற வெளிச்சத்தை கிறிஸ்தவர்கள் பிரகாசிக்க வேண்டும். இந்த கடைசி காலத்தில் ஒரு கிறிஸ்தவனின் நீதியான நடத்தை, கலங்கரை விளக்கம் போல இருக்கவேண்டும். "மேலும், கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர் களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக் குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர் களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவா களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ள வர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியரா யிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப் பட்டவர்களை நீ விட்டு விலகு"(2 தீமோ 3:1-5 ) மேலும், "நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்" (வசனம் 10) என்று தொடர்ந்து பேசுகிறார். நமக்கு எப்படிப்பட்ட மாதிரிகள் முன் வைக்கப்பட்டிருக்கிறது? இந்த மாதிரிகளைப் பின்பற்றுவதற்கு நாம் பெற்ற பொறுப்புகள் எத்தனை? நாம் சிறிய காலத்தில் பரிசுத்தமாக தொடங்கி நம்முடைய வாழ்க்கையில் சகல வழிகளிலும் இந்த பரிசுத்தத்தில் வளர்ச்சியடைய வேண்டும். இதன் பலனாக நம்முடைய முதல் எதிரியான உலகத்தை ஜெயித்து தேவனை மகிமைப்படுத்தலாம். நம்முடைய மூன்று எதிரிகளைக் குறித்து அநேக காரியங்களை எழுதின யோவான் - "என் சகோதரரே, உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள்." (1யோவான் 3:13) என்று எழுதுகிறார். இந்த உலகத்தையும் அதன் செயல்பாடுகளையும் எதிரியாக பாவிக்கக்கூடியவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் இந்த உலகத்திலிருந்து எந்த விதமான பாராட்டுகளையும், பரிசுகளையும் எதிர்ப்பார்ப்பதில்லை. மாறாக, அதை காட்டிலும் ஆண்டவரின் அங்கீகாரத்தைப் பெறுவார்கள்.

**நம்முடைய இரண்டாம் எதிரி :- மாம்சம்**

"ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டான வைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டான வைகள்" (1யோவான் 2: 16) ஒரு கிறிஸ்தவனை எதிர்த்து அவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை தடை செய்வதற்கு இந்த உலகத்தின் வழியாக மாம்சத்தின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் செயல்படுகிறது. ஆயினும், ஒரு உண்மை கிறிஸ்தவர் மாம்சத்துக் குரியவனாக இருப்பதில்லை. அவர் நோக்கங்களும், நம்பிக்கைகளும், குறிக்கோள்களும், ஆவிக்குரியவை களாக இருக்கிறது. கிறிஸ்துவைப் போலிருந்து இந்த உலகத்திற்கும், மாம்சத்திற்கும், எதிராக போர்புரிவதே ஒரு உண்மை கிறிஸ்தவனின் புதிய சித்தமாயிருக்கிறது. இந்த உள்ளான புதிய கிறிஸ்தவனை புது சிருஷ்டியாக பவுல் விவரிக்கிறார். "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரிந்தியர் 5: 17)

இந்த புதிய சிருஷ்டிக்கும் மாம்சத்துக்கும் இடையே நடக்கும் போராட்டத்தை பவுல் விவரிக்கிறார். சில நேரங்களில் பவுலின் மாம்சம் புது சிந்தையை மேற்கொண்டதாக சொல்கிறார். புது சிருஷ்டி சில யுத்தங்களில் தோல்வியடைந்தாலும் இறுதியில் பவுல் தன்னுடைய மாம்சத்தை ஜெயித்தார். ஏனெனில், அவர் தொடர்ந்து இறுதி மட்டும் போராடினார். அதே போல் நாமும் சில நேரங்களில் தோல்வியடைந்தாலும் பவுலை போல தொடர்ந்து போராட வேண்டியவர்களாயிருக்கிறோம். அப்பொழுது நாம் இறுதியில் வெற்றி பெறலாம்.

**நம்முடைய மூன்றாம் எதிரி :- பிசாசு**

இந்த வல்லமையுள்ள கடைசி எதிரியைக் குறித்து பேதுரு கடுமையாக எச்சரிக்கிறார். ". தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1பேதுரு 5: 8) இந்த எதிரியினிடமிருந்து முறையான பாதுகாப்பைப்பெற பவுலும் நம்மை எச்சரிக்கிறார். "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத் தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள்

எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்" (எபேசியர் 6 :12-18)

"தேவனுடைய சர்வாயுதங்கள்" என்ற தலைப்பில் **ஜனவரி, பிப்ரவரி 2009 ஹெரால்டு** பிரதியில் விவரமாக சம்பாஷிக்கப்பட்டது. இந்த சர்வாயுதங்கள் அநேக பாதுகாப்பு கருவிகளைக் கொண்டிருந்தது. இங்கு சொல்லப்பட்ட ஆவியின் பட்டயம், தேவனுடைய வார்த்தைகளை அடையாளப்படுத்தும்; மற்றும் வேதமாணவர்களாகிய நாம் மிகத் திறமையோடு சத்தியத்திலிருந்து அசத்தியத்தை வெட்டிப் பிரிக்கவேண்டியவர்களாய் இருக்க வேண்டும். இதற்கு தெளிவான வேத ஆராய்ச்சி தேவை. உலகத்தின் போர்ச்சேவகன், யுத்தகளத்தில் தன்னுடைய எதிராளிகளோடு போராடுவதற்கு, தன்னிடம் இருக்கும் கருவிகளைப் பயன்படுத்த பயிற்சி எடுப்பதற்கு ஒப்பாக நாமும் நம்முடைய ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்த பழகிக் கொள்ள வேண்டும். " கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1பேதுரு 3:15) நாம் விசுவாசிக்கும் காரியங்களைப் பற்றியும், அதை நாம் விசுவாசிக்கக்கூடிய காரணங்களை விவரமாக அறிந்துகொண்டால் நம்மிடம் கேள்வி கேட்போருக்கு சரியாக விடையளிக்க முடியும்.

சந்தேகம் மற்றும் பயம் சாத்தானின் மிக வல்லமையுள்ள இரண்டு கருவிகள். இருதயத்திலும் சிந்தையிலும் தேவனுடைய வார்த்தைகளின் மத்தியில் சாத்தான் சந்தேகத்தை விதைக்க முயற்சிக்கிறான். நமது தோல்விகளிலும் தேவனுடைய அன்பு நிலைத்திருக்கிறதா? நம்மோடு கூட தேவன் தொடர்பு கொண்டிருக்கிறாரா? என்ற சந்தேகத்தின் விதைகளை ஒருவர் இருதயத்தில் வளர்க்க துவங்கினால் அவர்களுக்குள் சோர்வுகளும் பயங்களும் ஏற்பட்டு ஆவிக்குரிய வளர்ச்சி குன்றிவிடும். இதற்கு தேவையான பாதுகாப்பு என்ன?

பவுலினால் வரிசைப்படுத்தப்பட்ட சர்வாயுதங்களில் விசேஷமான கடைசி ஆயுதம் ஜெபம். பூமிக்குரிய எந்த போர்வீரர்களும் தங்களுடைய மேலதிகாரியின் உத்தரவின்றி அல்லது தொடர்பின்றி யுத்த களத்திற்குள் நுழைவதில்லை. அதைப் போல இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுவோடு புதிய சிருஷ்டிகள் தொடர்பு கொள்ளவேண்டும். பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டவரிடம் வேண்டிக்கொள்கிறார்கள். பரலோக தந்தையோடும், நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடும் கூடிய ஐக்கியத்தினால் பெலனடைந்து புதுப்பிக்கப்படவேண்டும். இவர்களின் தொடர்பின்றி எந்த ஒரு நாளையும் கடத்திவிட முடியாது. ஆகவே நாம் "இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்." (1தெசலோனிக்கேயர் 5:17) "ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக்கோபு 4:7) என்று யாக்கோபு எழுதுகிறார். சற்று கற்பனை செய்து பாருங்கள். நம்முடைய வல்லமையுள்ள எதிராளியை வேகமாக விரட்டுவதற்கு நமக்கு வல்லமை கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, நாம் சாத்தானுடைய தொடர்பை, என்றும் தொடராமல் அவனை விரட்டிவிடுவோம் !

**முடிவுரை**

அநேக பிரதிநிதிகள் "மறைமுகமான பாதுகாப்பைப்" பெறுகிறார்கள். அலைக்கழிப்புகளில் இருந்தும், முறைகேடுகளிலிருந்தும், தங்களுடைய சொந்த தேசத்தின் சட்டத்திட்டங்களை மீறுவதிலிருந்தும் பாதுகாக்கப்படுகிறார்கள். ஆனால், கிறிஸ்துவின் பிரதிநிதிகள் இப்படிப்பட்ட எந்த பாதுகாப்பையும் இந்த உலகத்திலிருந்தும் பெறுவதில்லை. ஆகவே, கிறிஸ்துவின் பிரதிநிதிகள் பிரதிநிதிகளாக மட்டுமல்ல, சகலவிதமான எதிரியின் தாக்குதல்களை எதிர்த்து நிற்கக்கூடிய ஆயத்தமுள்ள கிறிஸ்துவின் போர்வீரர்களாகவும் இருக்க வேண்டும்.

கிறிஸ்துவைப் பின்பற்றும் நாம் இந்த உலகத்தில் இருந்தபோதிலும், இந்த உலகத்தாராய் இருப்பதில்லை. நாம் இந்த உலகத்தின் சிந்தையைப் பெற்று அதில் நாம் வெற்றிச் சிறக்க ஊக்குவிக்கப்படக்கூடாது. நம்முடைய சிந்தையும், நோக்கங்களும் மேலானவைகளாக இருக்கவேண்டும். இப்படியாக நாம் மற்றவரிடமிருந்து பிரிக்கப்பட்டு, அல்லது இந்த உலகத்தின் வழிகளுக்கும் சிந்தைகளுக்கும் இசைந்திராமல் காணப்படுவோம். இந்த உலகம் இயேசுவைப் பகைத்ததுபோல நம்மையும் பகைக்கும். அப்பொழுது கிறிஸ்துவின் பிரதிநிதியாகிய பவுலைப் போல் நாமும் நல்ல வேலையை செய்தோமென்று அறிந்துகொள்ளலாம்." எப்படியென்றால், நாங்கள் மக்கெதோனியா நாட்டிலே வந்தபோது, எங்கள் சரீரத்திற்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எப்பக்கத்திலேயும் உபத்திரவப்பட்டோம்; புறம்பே போராட்டங்களும், உள்ளே பயங்களும் இருந்தன"

(2கொரிந்தியர் 7:5) நம்முடைய எதிராளிகளாகிய உலகம், மாம்சம் மற்றும் சாத்தான் -நம்மை சுற்றியும், நமக்குள்ளிருந்தும் இந்த உலகத்தின் செயல்பாடுகளினால் சாத்தான் நமக்கு எதிராய் போரிடுகிறான். முன்னேறிச் செல்லும் கிறிஸ்தவ போர்வீரர்கள், இந்த மூன்று எதிரிகளையும் முடிவு பரியந்தம் தோற்கடித்தால், ஜெயம் பெறலாம்.

# நேர்மையாக கிறிஸ்துவைப் பிரதிபலித்தல்



*"துரோகமுள்ள தூதன் தீதிலே விழுவான்; உண்மையுள்ள ஸ்தானாபதியோ ஔஷதம்" நீதி மொழிகள் 13:17*

**Ray Charlton**

ஒரு பிரதிநிதி அல்லது தூதர் அல்லது தூதருக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகிஸ்தர் நம்பிக்கைக் குரியவராகவும் மிகச், உண்மையுள்ளவராகவும், உறுதியான கோட்பாடுகளைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். கிரியைகளிலும் மதிப்பிலும், வழிமுறைகளிலும், அளவிலும், கோட்பாடுகளிலும், எதிர்பார்ப்புகளிலும் முடிவுகளிலும் உறுதியாக இருப்பதே நேர்மை என்று இங்கு குறிப்பிடப்படுகிறது. நேர்மையுள்ளவர்கள், கிரியைகளில் உண்மையும், உத்தமமும், உள்ளார்ந்த உணர்வுள்ள வர்களாக இருப்பார்கள் என்று கருதப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்ட நேர்மை, மாய்மாலத்திற்கு எதிரானது. நற்குணங்கள் நேர்மையை ஊக்குவிக்கிறது. ஆனால் பாசாங்கு செய்பவர் அந்நிலையில் இருப்பதுபோல வேஷமிடுகிறார்.

இந்த பாடத்தின் தலைப்பு வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள தூதர் நேர்மையில்லாதவராய் காணப்படுகிறார். இப்படிப்பட்ட நபர் பிரச்சனைகளில் அகப்பட்டு தன்னுடைய தாய் நாட்டிற்கு அவமானத்தை வருவிக்கிறார். அவர் வஞ்சித்ததினால், தவறானவராக நிரூபிக்கப்பட்டு தோல்வியடைகிறார். இப்படிப்பட்ட நிலை கண்டு பிடிக்கப்பட்ட பின், அந்த நபர் தீர்ப்புக்குள்ளாகிறார். நம்பிக்கைக்குரியவர்களை ஏமாற்றுவதை தேவன் வெறுக்கிறார்.

நேர்மையுள்ள பிரதிநிதி தங்களால் முடிந்தவரைக்கும் காரியங்களை நிறைவேற்றுவார். அவரின் தேசத்தை குறித்து அனைவரும் பாராட்டுமளவுக்கு நடந்து கொள்வார். தங்கள் தேசத்திற்கும் அவர்கள் தேசத்திற்கும் ஆரோக்கியமான நல்லுறவை ஏற்படுத்துவார். இரு தேசத்திற்கிடை யிலிருந்தும், முரண்பாடுகளை சரிசெய்து பரஸ்பர உறவை ஏற்படுத்துவார். தன்னுடைய தேசத்தின் மேல் ஆர்வமிக்கவராய், தானும் ஆரோக்கியம் உள்ளவர்களாயிருப்பார்.

விசுவாசமுள்ள தூதர்களின் கிரியைகள், இலாபகரமான பலனை 1 இராஜாக்கள் 5-ம் அதிகாரம் காட்டுகிறது. இராஜாவாகிய சாலொமோன் மற்றும் இராஜாவாகிய ஈராமின் தூதுவர்கள் ஆலயம் கட்டுவதற்காக தானியத்திற்குப் பதிலாக மரங்களை பண்டமாற்றி கொள்வதற்கு ஒப்பந்தமிட்டுக் கொண்டனர். இந்த காரியம் இரண்டு தேசத்திற்கு மத்தியில் சமாதானத்தைக் கொண்டு வந்தது."கர்த்தர் சாலொமோனுக்குச் சொல்லியிருந்தபடியே அவனுக்கு ஞானத்தைத் தந்தருளினார்; ஈராமுக்கும் சாலொமோனுக்கும் சமாதானம் உண்டாயிருந்து, இருவரும் உடன்படிக்கை பண்ணிக்கொண்டார்கள்" (1 இராஜாக்கள் 5:12) சரியான தூதர்களை தேர்வு செய்வதில் இந்த ஞானம் வெளிப்பட்டது. இதற்கிசைவாக இந்த தூதுவர்கள், தங்களுடைய இராஜாக்களுக்கு விசுவாசமுள்ள ஊழியக்காரர்களாக தங்களை நிரூபித்தார்கள்.

ஆனால், மற்ற தூதர்கள் இவ்வளவு விசுவாசமுள்ளவர்களாகக் காணப்படவில்லை. "எரிகோவுக்கும் ஆயிக்கும் யோசுவா செய்ததைக் கிபியோனின் குடிகள் கேள்விப்பட்ட போது, ஒரு தந்திரமான யோசனைப்பண்ணி தங்களை ஸ்தானாபதிகள் போலக் காண்பித்து, பழைய இரட்டுப் பைகளையும், பீறலும் பொத்தலுமான பழைய திராட்ச ரசத் துருத்திகளையும் தங்கள் கழுதைகள் மேல் வைத்து பழுதுப்பார்க்கப்பட்ட பழைய பாதரட்சைகளை தங்கள் கால்களில் போட்டு பழைய வஸ்திரங்களை உடுத்திகொண்டார்கள். வழிக்கு அவர்கள் கொண்டுபோன அப்பமெல்லாம் உலர்ந்ததும் பூசணம் பூத்ததுமாயிருந்தது. அவர்கள் கில்காலில் இருக்கிற பாளயத்துக்கு யோசுவாவினடத்தில் போய், அவனையும் இஸ்ரவேல் மனுஷரையும் நோக்கி : நாங்கள் தூரதேசத்திலிருந்து வந்தவர்கள், எங்களுடைய உடன்படிக்கை பண்ணுங்கள் என்றார்கள். (யோசுவா 9:3-6,11)

இஸ்ரயேலரோடு, கிபியோனியர்கள் வஞ்சகமான ஒரு ஒப்பந்தத்தை செய்துகொண்டனர். "இவர்கள் தேவனுடைய ஆலோசனையை கேட்கவில்லை" (யோசுவா 9:14) இந்த ஒப்பந்தம் இஸ்ரயேல் ஜனங்களுக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுத்தது."அப்பொழுது சகல பிரபுக்களும், சபையார் யாவரையும் நோக்கி: நாங்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர்பேரில் அவர்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்தோம்; ஆதலால் அவர்களை நாம் தொடக்கூடாது" (யோசுவா 9:19) தேவனுடைய கிரியைகளினிமித்தமே இந்த சூழ்நிலை மாற்றி திருத்தப்பட்டது. அப்போது கிபியோனியர் இஸ்ரயேலின் ஊழியக்காரர்களாகி, மரம் வெட்டுபவர்களாகவும், தண்ணீர் சுமப்பவர்களாகவும் வேலை செய்தனர்.

## நேர்மையோடு, அறிவு துணை நிற்கும்

கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருக்கும் இன்றைய கிறிஸ்தவர்கள், பரலோக தந்தையைப் பற்றியும் கிறிஸ்துவை பற்றியும் மனுக்குலத்திற்காக அவர்களின் தெய்வீக திட்டங்கள் பற்றியும் நல்ல அறிவோடு நேர்மையாக கிரியை செய்யவேண்டும். "பிரஸ்பியு" என்ற கிரேக்க வார்த்தை, தூதர் என்று மொழிபெயர்க்

கப்பட்டுள்ளது. (ஸ்டிராங்க்ஸ -4243) இதற்கு "அனுபவமிக்க ஒரு மூப்பர்" என்றும் பொருள்படும். பரலோகத்தந்தை மற்றும், கிறிஸ்துவைப் பற்றிய அறிவினால் இந்த அனுபவத்தைப் பெறவேண்டும். "ஆதலால், கர்த்தர்நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து,"( எபேசியர் 4:1) என்று பவுல் குறிப்பிடுகிறார்.

பாத்திரவான்களாய் நடப்பதற்கு தேவைப்படும் அறிவைக் குறித்து பவுல் கூறுகிறார்.

➔ கிறிஸ்துவைப் பற்றிய இரகசியம் (எபேசியர் 3:3)
➔ கிறிஸ்துவின் அளவற்ற ஐஸ்வரியம் (எபேசியர் 3:8)
➔ அளவிடமுடியாத கிறிஸ்துவின் ஐசுவரியங்கள் (எபேசியர் 3:10)
➔ மனுக்குலத்திற்காக கிறிஸ்துவின் அன்பின் ஆழம். (எபேசியர் 3:19)

இந்த அறிவுக்கு ஒரு நோக்கமுண்டு, கிறிஸ்துவின் பிரதிநிதியாய் இருப்பவர்கள் நிச்சயம் இந்த அறிவைப் பெற்றிருக்கவேண்டும். "நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களா யிருக்கும்படியாக அப்படிச் செய்தார்" (எபேசியர் 4:14,15) இந்த அறிவைப் பெறாத ஒரு பிரதிநிதி அன்பான தேவனை என்றும் பிரதிபலிக்கவும் முடியாது, கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றவும் முடியாது. (எபேசியர் 5:1)

**நேர்மை சுயலாபத்திற்காக அல்ல**

"அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம்." (2 கொரிந்தியர் 2:17) இந்த ஒரு இடத்தில் மட்டுமே "காப்பல்லீயுவோ" என்ற கிரேக்க வார்த்தை "கலப்பாய்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மதுபானம் விற்பவர் தங்களுடைய இலாபத்தை அதிகரித்துக் கொள்ள தண்ணீரைக் கலப்பதற்கு இது அடையாளப்படுத்துகிறது. மொத்தத்தில் இது ஒரு வஞ்சகம். ஆகவே, தேவனுடைய வார்த்தைகளை கலப்பாய் பேசுகிறவர்களுக்கு பவுல் இந்த வார்த்தையை ஒப்பிடுகிறார். சுவிசேஷ யுகம் முழுவதுமாக அநேகர் கிறிஸ்துவ பிரதிநிதிகள் என்று தங்களை கூறிக்கொண்டு பொருளாதார நன்மை களுக்காக சத்தியத்தை சுலபமாய் பேசிக் கொண்டிருக்கின்றனர். ரோம கத்தோலிக்க சபையின் பிரதிநிதிகளால் விற்கப்பட்ட பாவ மன்னிப்பு சீட்டு இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். வருங்காலத்தில் செய்யக்கூடிய பாவங்களுக்காக இந்த பாவ மன்னிப்பு சீட்டு முன்னதாகவே விலைக்கு வாங்கப்பட்டது. 1517-ம் வருடம் மார்டீன் லூத்தரினால் இது கடுமையாக தடுக்கப்பட்டது.

அடுத்து சுய இலாபத்தை எண்ணின மாயவித்தைக்காரனான சீமோன் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. சீமோன் தன்னுடைய மாயவித்தை யினால் பிழைத்துக் கொண்டிருந்தான். இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய இராஜ்யத்தைப் பற்றியும் பிலிப்பு பேசியதை அவன் கேட்டபோது ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். ஆனால், அவன் எதிர்பார்த்த வகையில் பரிசுத்த ஆவியின் வரங்களை அவன் பெறவில்லை. பேதுருவும், யோவானும் சமாரியாவுக்கு அனுப்பட்டபோது சீமோன் அவர்களின் வழிமுறையை அறிந்து, தானும் இந்த ஆவியை பெற்றுக்கொள்வதற்கு வகைத் தேடினான். "அப்போஸ்தலர் தங்கள் கைகளை அவர்கள்மேல் வைத்ததினால் பரிசுத்தஆவி தந்தருளப்படுகிறதைச் சீமோன் கண்டபோது, அவர்களிடத்தில் பணத்தைக் கொண்டுவந்து: நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை" (அப்போஸ்தலர் 8:18-21)

தேவன் கொடுக்கும் இலவசமான வரங்களிலிருந்து ஆதாயத்தைப் பெறுவதற்கு சீமோன் வாய்ப்பு தேடினான். கிறிஸ்துவின் பிரதிநிதிகளுக்கு தேவனிடத்திலிருந்து கிடைக்கும் எந்த வரங்களையும் சுய இலாபத்திற்காக அல்ல, கிறிஸ்துவுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்பதை நினைவிற் கொள்ளவேண்டும். "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய் நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்" "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" (2 கொரிந்தியர் 4:2,5,6) என்று பவுல் கடுமையாக கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறார்.

**நேர்மையும் ஒழுக்கமுள்ள செயல்பாடுகளும்**

பிரதிநிதிகள் - தங்களுடைய வார்த்தைகளிலும், நோக்கங்களிலும் மட்டும் நேர்மையாக இருந்தால்

போதாது. அவர்கள் நடத்தையிலும், ஒழுக்கமுள்ளவர்களா யிருக்கவேண்டும். இயேசுவின் முதல் வருகையில் மத போதகர்களின் செயல்பாடுகளைக் குறித்து இயேசு பரியாசம் பண்ணினார். அக்காலத்தில் யூத ஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக அனுப்பட்டவர்கள் இவர்களே. தேவனுடைய வார்த்தைகளை அவர்களுக்கு அறிவிப்பதற்கு பொறுப்புள்ளவர்களாயிருந்தார்கள். ஆயினும், அவர்களைக் குறித்து கிறிஸ்து பேசும்போது "பின்பு இயேசு ஜனங்களையும் தம்முடைய சீஷர்களையும் நோக்கி: வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக் கிறார்கள்; ஆகையால், நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறயாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள், சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள். சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள்; தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்; தங்கள் காப்புநாடாக்களை அகலமாக்கி, தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதாக்கி, விருந்துகளில் முதன்மையான இடங்களையும், ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ, என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்." (மத்தேயு 23:1-7) என்று கூறினார்.

தன்னுடைய சீஷர்களுக்கு கிறிஸ்து எப்படிப்பட்ட மாதிரியை பின்வைத்துப் போனார்? தேவனுடைய குமாரன், இராஜாதி இராஜா, அவருக்குண்டான வல்லமையைப் பயன்படுத்தி அனைவர் மேலும் ஆதிக்கம் செலுத்தியிருக்கலாம். ஆயினும் "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்... " (மத்தேயு 20:28) என்று உரைத்தார். மேத்யு ஹென்றி என்ற விமர்சகர் - "அவர் மிகப் பெரிய அந்தஸ்தில் பணிபுரிவதாக எண்ணவில்லை, அவர் தன்னை பெரியவராகக் காட்டிக் கொள்ளவும் இல்லை மற்றவர்கள் தன்னை சேவிப்பார்கள் என்று அவர் காத்திருக்கவும் இல்லை. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இயேசு தம்முடைய சீஷர்களின் கால்களைக் கழுவினார். ஆனால் சீஷர்கள் இயேசுவின் கால்களைக் கழுவினதாக நாம் எங்கும் வாசிப்பதில்லை. ஆழ்ந்த வருத்தத்தில் இருப்போருக்கு உதவி செய்யவும், வியாதிப்பட்டு இருப்பவர்களுக்கு ஊழியம் செய்யவும், எந்த வேலைக்காரனுடைய விருப்பங்களையும், உடனடியாக நிறைவேற்றக்கூடிய எஜமானாகவும் அவர் வந்தார். தன்னுடைய உணவையும் தன்னுடைய இளைப் பாறுதலையும் பொருட்படுத்தாமல் இப்படிப்பட்டவர் களுக்குத் தொடர்ந்து ஊழியம் செய்தார்" என்று எழுதினார்.

குடியுரிமை பெற்ற தேசத்திற்கு முழுமையான ஊழியம் - பரலோகத்திற்குரிய கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, பிரதிநிதியின் வேலை நேர்மையானதொன்றாக இருக்கிறது. வார்த்தைகளைக் காட்டிலும் கிரியைகள் சத்தமாய் பேசும். ஒருவருடைய கிரியையினால் எஜமானனுக்கு கனத்தையோ, அவமரியாதையையோ கொண்டு வருவதற்கு வாய்ப்பு உண்டு. பிரதிநிதிகள் இந்த உலகத்திற்குள் சென்று வாழ்ந்து கொண்டு, ஜனங்களிடம் செய்தி சொல்ல வேண்டும். "நீங்கள் உலகத்துக்கு வெளிச்ச மாயிருக்கிறீர்கள். மலையின் மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கை கொளுத்தி மரக்காலால் மூடி வைக்காமல், விளக்குதண்டின் மேல் வைப்பார்கள், அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளை கண்டு, பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக் கடவது." (மத்தேயு 5:14-16) என்ற இயேசு கூறினார்.

"நீங்கள் இந்த உலகத்திற்கு வெளிச்சமாயிருக் கிறீர்கள்" என்ற சொற்றொடர், ஒருவரை மேன்மையான சிந்தைக்கு அழைத்துச் சென்று, பரிசேயர், சதுசேயரின் நிலைமைக்குத் தங்களை உயர்த்தலாம், ஆனால் இந்த வெளிச்சமானது. ஒருவருடைய சொந்த திறமையினால் வெளிப்படாமல் பரலோக பிதா தம்முடைய கிருபையினால், பரிசுத்த ஆவியைக் கொண்டு வெளிப்படுத்தும் வெளிச்சமாயிருக்கிறது.

ஜேமிசன் பாசெட் மற்றும் ப்ரேளன் என்ற வேதாகம விமர்சகர்கள் மத்தேயு 5:14 வசனத்தைக் குறித்து- "இந்த வசனம் நம்முடைய ஆண்டவராம் இயேசுகிறிஸ்துவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் மட்டுமே பொருந்த வேண்டும், ஏனெனில் இவர்கள் மட்டுமே தாங்கள் பெற்ற பரிசுத்த ஆவியினால் (கிறிஸ்து இயேசு பெற்றிருந்த அதே சிந்தை) அந்த வெளிச்சத்தை உலகத்திற்கு பிரதிபலிக்கிறார்கள். இவர்களைத் தவிர வேறு எந்த கிறிஸ்தவர்களும் இதற்கு அழைக்கப் படுவதில்லை" என்று எழுதுகிறார்கள்.

கிறிஸ்துவின் பிரதிநிதிகளாய் இருப்பதற்கு ஆர்வம் உள்ளோர், மிக கவனத்தோடு படிக்க வேண்டும். அப்பொழுது, அவர்கள் கற்றுக் கொண்டவைகளைத் தங்களுடைய வாழ்க்கையில் பொருத்தி உண்மையோடும் முழு அர்ப்பணிப்போடும் செயல்படுவார்கள். இதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் -"நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து,எதிரியானவன் உங்களைக் குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல்வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும், நல்லொழுக்கமுள்ளவனும் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக." (தீத்து. 2:7,8) என்று தீத்துவுக்கும், நமக்கும் நினைப்பூட்டுகிறார்.

தனிப்பட்ட கடமைகள்

# ஆவிக்குரிய வாழ்க்கை



*"அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்" -ரோமர் 8:5*

**Dan Wesol**

உண்மையான கிறிஸ்தவர்கள் தங்களுடைய சிந்தையிலும், குறிக்கோளிலும், வார்த்தையிலும், கிரியையிலும் பழைய சிருஷ்டியாக இருக்கலாகாது. ஏனெனில், சகலமும் புதிதாயின. கிறிஸ்தவர்கள் தேவனுடைய புதிய சிருஷ்டியின் ஒரு பகுதியாய் இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய கைவேலையாய் இருக்கிறார்கள். மேலும், இவர்கள் உண்மையான ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறார்கள்."அவருடைய நாமத்தின்மேல் விசுவாச முள்ளவர்களாய்அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." (யோவான் 1:12,13)

தங்களுடைய இருதயத்தில் நீதியான குணங்கள் வளர்ச்சியடைவதற்காக தேவன் கிறிஸ்தவர்களுக்கு முன் வைக்கும் பல்வேறு சூழ்நிலைகளில், தேவனுடைய பிரமாணங்களைக் கீழ்ப்படிந்து நீதியான நியாயங்களையும் பயன்படுத்த வேண்டும். சரியான முடிவுகளை செயலாற்றுவது மிகக்கடினமாய் இருக்கலாம். அதை நடைமுறைப் படுத்துவதில் கிறிஸ்தவர்கள் நீதியான முடிவுகளை எடுக்கவும், கடுமையான தேர்வுகளை தவிர்த்து, உலகப் பிரகாரமாக இசைந்திருப்பதற்கு விழுந்துபோன மாம்சம் நம்மை தூண்டலாம். தெளிவான சத்தியத்திற்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை."உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்" (மத்தேயு 5:37) என்று இயேசு கூறினார்.

கிறிஸ்தவர்கள் தங்களுடைய சொந்த விருப்பத்தை அல்ல, தேவனுடைய இராஜ்யத்தையே தேட வேண்டும். இதற்காக குடும்பத்தையும், தனிப்பட்ட பொறுப்புகளையும், வேலைகளையும், புறக்கணிக்க வேண்டும் என்று பொருளல்ல. (1தீமோத்தேயு 5:8, 2 தெசலோனிக்கேயர் 3:7-12) கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகள், தங்களுடைய சொந்த ஜீவனுக்காக அல்ல, தாங்கள் பெற்றிருக்கும் அனைத்தையும் தேவ பணிக்காக பலி பீடத்தின் மேல் அர்ப்பணிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நீங்கள் பெற்ற சகல காரியங்களும், வீணாகப் போய்விடாமல், அவைகளைப் பயன் படுத்துவதினால் தேய்ந்து போக வேண்டும் கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வட்டத்தை விரிவாக்கி, மற்ற ஜனங்களுக்கு முன் தங்களுடைய வெளிச்சம் பிரகாசிக்கும்படியாக." மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத்தேயு 5:16) இடுக்கமான வழியில் பிரவேசித்து ஜீவபலியாக தன்னை செலுத்தக்கூடிய ஒரு புதிய சிருஷ்டி உண்மையான கிறிஸ்தவ சகோதரர்களுக்காக ஜெபிக்கவேண்டும். இவர்கள் வெளிப்புறமான தோற்றத்தை அல்ல, இருதயத்தின் நினைவுகளைப் பார்க்கக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்று மில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:28). மற்றவர்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய வார்த்தைகளை ஆராயவும், அவைகளை நடைமுறைப்படுத்தவும், மற்றவர்களை ஊக்குவிக்க வேண்டும். எப்படிப்பட்ட எதிர்ப்புகள் வந்தபோதும் துணிந்து அவைகளை எதிர்த்து, கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளால் வழிநடத்தப்பட்டு ஓடவேண்டிய ஓட்டத்தைத் தொடர்ந்து ஓடவேண்டும். அநேக பெயர் கிறிஸ்தவர்கள் மத்தியில், உண்மையான கிறிஸ்தவர்களைக் கண்டுபிடிப்பது கடினம். "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம். இதினாலே நாம் நம்மைச் சத்தியத்திற்குரியவர்களென்று அறிந்து, நம்முடைய இருதயத்தை அவருக்குமுன்பாக நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்" (1யோவான் 3:18)

இந்த பூமிக்குரிய அமைப்புகள் பொருளாதார நிலை மற்றும் அரசியல் இந்த சமுதாய ஒழுங்கை ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் காணும் போது, தேவனுடைய இராஜ்யத்திற்கு எளிதில் வழிவகுக்கும். "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதா யிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!" (1பேதுரு 3:11) என்ற பேதுருவின் கேள்விக்கு ஒவ்வொருவரும் பதிலளிக்கவேண்டும்.

### எல்லாருக்கும் முன்பாக யோக்கியமானதை செய்ய நாடுங்கள்

அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர், நேர்மையையும், நடத்தையில் அவருடைய உண்மையையும் கட்டாயமாக பிரதிபலிக்க வேண்டும். உண்மையும், உத்தமும் அவருடைய குணலட்சணங்களின் அஸ்திபாரமாக

இருக்கவேண்டும். மேலும், உள்ளத்தின் ஆழங்களில் சத்தியம் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். (சங்கீதம் 81:14, 51:6) இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் மிக அருகாமையில் இருக்கிறார். (சங்கீதம் 145:18)." சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்" (யோவான் 18:37) என்று இயேசு பிலாத்துவிடம் கூறினார். சத்தியத்தை அஸ்திபாரமாகக் கொண்டு கிறிஸ்தவர்கள் சட்டத்திற்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

"சர்ப்பங்களைப்போலவினாவுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்" (மத்தேயு 10:16) என்ற இயேசுவின் வார்த்தைகளை நாம் செயல்முறைப்படுத்தும் போது எப்படிப்பட்ட சூழ்நிலை களிலும் புது சிருஷ்டிகள் சத்தியத்தை மட்டுமே பேச வேண்டும். இவர்கள் உதடுகளினால் அல்ல, வாழ்க்கையிலும் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும். கசப்பான கிரியைகளாகிய புறங்கூறுதல், மிகைப்படுத்திபேசுவது, வதந்திகள் போன்ற காரியங்கள் சுவிசேஷத்தின் மதுரமான சத்தியத்தை கெடுத்து விடாதபடிக்கு எச்சரிப்பாக இருக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் மற்றவர்களின் வேலைகளில் என்றுமே, தலையிடக் கூடாது. (1தீமோத்தேயு 5:13,1பேதுரு 4:15)

மற்றவர்களைப் பொருத்தவரையில் நாம் தலையிடும் போது நமக்குள் இரண்டு கேள்விகளை கேட்டுக் கொள்ள வேண்டும். இது "என்னுடைய வேலையா" ? மற்றும் "ஒரு வேளை என்னுடைய பிரச்சனையில் இவர் நுழைந்தால், நான் அவரை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டிருப்பேனா"? இப்படிப்பட்ட சூழ்நிலையில் அப்போஸ்தலனாகிய பவுலின் கட்டளைகளை பின்பற்றுவது நலமாயிருக்கும். "நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே, அமைதலுள்ளவர் களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும்..."(1தெசலோனிக்கேயர் 4:11) கிறிஸ்தவர்கள் தீமையானவைகளை பேசுவதைக் காட்டிலும் தேவ ஆவியைக் கொண்டு நல்ல கிரியை நடப்பித்து எளிதில் தவறுகளைத் திருத்தலாம். (நீதிமொழிகள்9:7,8; யோவான்3:20 ; 2 தெசலோனிக்கேயர்3:7)

**குடும்பப் பொறுப்புகள்**

நீதி மற்றும் அன்பான சூழ்நிலையில் தங்களுடைய பிள்ளைகளை வளர்க்க வேண்டியது பெற்றோரின் கடமை. இந்த ஒரு சூழ்நிலை கணவன் மனைவிக்கிடையில் உள்ள உறவில் - நீதி, அன்பு, பொறுமை, பாசம் போன்ற குணங்கள் குடும்பத்தில் வளர துவங்குகிறது. புருஷன் மனைவிக்குத் தலையாய் இருப்பதினால், அந்த குடும்பத்தை தன்னுடைய இஷ்டத்திற்கு நடத்த புருஷனுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டதாகப் பொருளல்ல. இப்படிப்பட்ட கணவன் திருமணத்தின் பொருளை சரியாக புரிந்து கொள்வதுமில்லை. வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ள தலைமையைக் குறித்து அவர் அறிந்து கொள்வதுமில்லை. (எபேசியர் 5:23-33) கிறிஸ்து, தன்னுடைய சபையை நேசித்து சபைக்காக தன்னையே கொடுத்தது போல புருஷன் மனைவியை நேசிக்கவேண்டும். அவர் தன்னுடைய மனைவியின் சிந்தனைகள் ஆலோசனைகள், நோக்கங்களை மதித்து, ஆவிக்குரிய வளர்ச்சியில் அவளை ஊக்குவிக்கவேண்டும். அவர் தன்னுடைய யோசனையைப் பகிர்ந்துக் கொண்டு பொதுவான வேலைகளில் உதவி செய்து ஒரு நல்ல வாழ்க்கை துணையை ஏற்றுக்கொண்டு குடும்பத்திற்கு தேவையான திட்டங்களை இருவரும் திட்டமிட்டு, எல்லாவற்றிலும் ஒருவருக்கொருவர் உண்மையாய் இருக்க வேண்டும். கணவனோ, மனைவியோ ஒருவர் மேல் ஒருவர் தங்களுடைய மூர்க்கத்தனமான கோபத்தை வெளிப்படுத்துவதற்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ஏனெனில், ஒருவரும் தன் சொந்த மாம்சத்தை பகைக்கமாட்டாரே, ஒருவருக்கொருவர் அன்பாகவும், கனிவாகவும், நடந்து கொள்ளவேண்டும். துவக்கத்தில் பிள்ளைகளின் பொறுப்பு தாயிடம் இருந்தாலும், தங்களுடைய பிள்ளைக்கு தெய்வீக பிரமாணங்களைக் கற்பிப்பதில் தகப்பன்களுக்கே முக்கிய பொறுப்பு உள்ளது. உண்மையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பேணிக்காப்பதில் முழுக்கவனம் செலுத்தவேண்டும். பெற்றோர்கள் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும், இருக்கக்கூடிய தனிமனித உரிமைகளை மதிக்கவேண்டும். அப்படி தங்களுடைய பிள்ளைகளையும் பயிற்றுவிக்க வேண்டும். தவறான காரியங்களைச் சுட்டிக்காட்டி திருத்துவதைக் காட்டிலும் நன்மையான காரியங்களுக்கு அதிக பாராட்டுகளை தெரிவிக்க வேண்டும். பொதுவான இடங்களில் பாராட்டலாம். ஆனால் தனிப்பட்ட முறையில் கண்டிக்க வேண்டும்.

இன்றைய உலகத்தில் சட்டப்பூர்வமான தண்டனைகள் பெரும்பாலும் வலுக்கட்டாயப் படுத்தப்படுகிறது. இவைகள் தேவைப்பட்டால் மட்டுமே செயல்படுத்தப்படவேண்டும். உடல் ரீதியாக கொடுக்கப்படும் தண்டனைகள் விரக்தியினாலும், கோபத்தினாலும், சோர்வினாலும் கொடுக்கப்படுகிறது. அந்த பிரச்சனைகளைக் குறித்து பொறுமையாக ஜெபித்து, தேவனுக்கு பிரியமான முறையில் தீர்வு காண்பதற்கு அவருடைய ஞானத்தைக் கேட்டு பெற்றுக் கொள்வதற்கு நமக்கு நீடிய பொறுமையும், பெலனும் தேவைப்படுகிறது. அதற்கு பின் - 1. இப்படிப்பட்ட காரியங்கள் தவறு என்று குழந்தையிடம் புரிய வைக்கவேண்டும். 2. இவைகள் மீண்டுமாக செயல்படுத்தக்கூடாது என்பதற்கான காரணங்களை எடுத்துரைக்கவேண்டும். 3. இந்த தீமையான காரியங்களில் பலன்கள் என்னவென்று அறிவிக்க வேண்டும்.

இதற்கு கூடுதலாக, வரம்புக்குட்ப்பட்ட சில குறிப்பான சின்னச் சின்ன சிட்சைகளைக் கொடுக்கலாம். (நீதிமொழிகள் 29:15) எப்படிப்பட்ட காரியங்களினால் தம்முடைய பிள்ளைகள் நன்மையான பாதையில் செல்வார்கள் என்பதை பெற்றோர் முடிவெடுக்கவேண்டும். இவர்கள் எடுக்கக்கூடிய முடிவுகள் குழந்தையின் மனநிலைமைக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், உடல் ரீதியான வளர்ச்சிக்கும் ஏற்றதாக இருக்கவேண்டும். ஒரு குழந்தையின் எதிர்காலத்தைக் குறித்து பெற்றோர் திட்டமிடுகையில் நம்முடைய பரமபிதா நம்மை சீர் பொருத்துவதற்காக செயல்படுத்தும் முறைகளை நாம் ஞானமாக யோசித்துப் பார்க்கவேண்டும். அவர் மிகவும் கனிவுள்ளவர் என்றும், இரக்கமுள்ளவர் என்றும் நாம்

அறிந்திருக்கிறோம் அல்லவா ? அவருடைய நிர்வாகம் ஞானமுள்ளதாய் இருக்கவில்லையா ? ஆவிக்குரிய திருத்தங்கள் நமக்கு தேவைப்படும்போது, அவர் நம்மேல் காட்டும் இரக்கத்தையும், பரிவையும் உணர்ந்திருக்கிறோம் அல்லவா ?

**பொருளாதார பொறுப்புகள்**

ஒவ்வருவரும் இந்த உலகத்திற்கு நிர்வாணமாய் வந்து அவ்விடத்திற்கு அவ்வண்ணமே திரும்புகிறார்கள். (யோபு 1:21, பிரசங்கி 5:15)இதை அறிந்த புதுசிருஷ்டி, பணத்தை தன்னுடைய வாழ்க்கை முழுவதும் பயன்படுத்தக்கூடிய கருவியாகப் பார்க்க வேண்டும். ஏனெனில் "பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது" (1தீமோத்தேயு 6:10) புதிய சிருஷ்டிகள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட எல்லைக்குள் ஜீவிக்க வேண்டும். ஒருவர் 100 டாலர்ளை சம்பாதித்தால் அவர் 90 டாலர்களுக்குள் தன்னுடைய செலவுகளை அடக்கிவிடவேண்டும். இப்படியாக ஆண்டவரின் பணிக்காகவும் சபைக்காகவும் மற்றவரின் அத்தியாவசிய தேவைக்காகவும், வருங்காலத்தின் தேவைக்காகவும் ஒதுக்கி வைக்கலாம். “அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மைவாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை.” (ரோமர் 13:8) இதை புது சிருஷ்டிகள் கற்பனையாகப் பெற்றிருக்கிறார்கள், அவர்கள் திடீரென்று நோய்வாய்ப்படுகையில் அல்லது வேலை நிறுத்தம் ஏற்படுகையில் அல்லது ஏதோ சில காரணங்களினால், வருமானத்திற்கு வழியின்றி இருக்கும் பட்சத்தில், குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்காகவது கடன் வாங்காமல் ஜீவிப்பதற்கேற்ற கையிருப்பு நம்மிடம் இருக்கவேண்டும். (யோபு 5:7; 14:1; நீதிமொழிகள் 6:6-8; மத்தேயு 6:34)

மிக அத்தியாவசியமான ஒரு கருவியாக மட்டுமே கடன் பயன்பட வேண்டும். நம்முடைய வசதிக்காக நாம் வைத்திருக்கும் கடன் அட்டைகளில் உள்ள கடனை மாதம், மாதம் முழுமையாக கட்டி தீர்க்கவேண்டும். ஏனெனில் இப்படி செய்யாத பட்சத்தில் கடன் குவிக்கப்படும். அதை அடைக்கும் நிர்வாகத்தை நாம் இழந்துவிட்டால், நாம் கட்டப்பட்டவர்களாகி, தேவனுக்காக செலவிடப்பட வேண்டிய ஒருவருடைய நேரமும் சிந்தையும், கடனை அடைப்பதற்கான முயற்சிகளில் செலவழிப்போம். "பணம் ஒரு கொடூரமான முதலாளி ஆனால் அதேநேரத்தில் அதே பணம் ஒரு சிறந்த ஊழியக்காரன்" ஒருவர் கடனை குவித்துக் கொண்டால் அதிலிருந்து விடுபடுவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டும். அதிலிருந்து விடுபட்டபின், அதில் மீண்டும் சிக்கிக்கொள்ளாதபடிக்கு எச்சரிப்போடு நம்மை காத்துக்கொள்ள வேண்டும். ஒரு வீட்டிற்கு வாகனம் வாங்கும் போது, அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ற வாகனத்தை அல்ல, அவர்களின் வருமானத்திற்கு உட்பட்ட கடனுக்கு ஏற்றவாறு வாங்க வேண்டும்.

புது சிருஷ்டிகள் கடன் கொடுப்பதைக் காட்டிலும் மற்றவர்களுக்கு தங்களிடமிருப்பதை சந்தோஷத்துடன் கொடுப்பது நல்லது. “உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே.” (மத்தேயு 5:42) என்று இயேசு கூறுகிறார். மற்றவர்களை வேலைக்கு அமர்த்துகையில் அவர்களின் வேலைக்கு ஏற்றகூலியைக் குறித்த நேரத்தில் கொடுத்துத் தீர்க்க வேண்டும் என்ற ஆவிக்குரிய எச்சரிப்பை புதிய சிருஷ்டிகள் நிறைவேற்ற வேண்டும்.

(உபாகமம் 24:15; யாக்கோபு 5:4) உங்களை எதின்மேல் அதிகாரியாய் வைத்திருந்தாலும் சரி, ஒரு நல்ல உக்கிராணக்காரனாய் இருப்பதே கிறிஸ்தவர்களின் முக்கிய பொறுப்பாகும். (1பேதுரு 4:10)

மற்றவர்களை வசியப்படுத்தக்கூடிய நோக்கத்தோடு நாம் துணிமணிகளை வாங்கக்கூடாது.

மேலோட்டமான அழகு உண்மையல்ல, நம்முடைய இருதயத்திலிருந்து வெளிவரக்கூடிய நம்முடைய சிந்தைகள், வார்த்தைகள் மற்றும் கிரியைகளே உண்மையான அழகைக் கொடுக்கும். தேவனுடைய பார்வையில், புது சிருஷ்டியின் அழகைக் குறித்து அப்போஸ்தலர் கூறுகிறார். “அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது.” (1பேது 3:4) நாம் விலைக்கு வாங்கக்கூடிய கம்பியூட்டர், ஆடைகள், வீட்டிற்குத் தேவையான பொருட்கள் அனைத்துமே நம்முடைய பலியின் உடன்படிக்கைக்கு (ரோமர் 12:1,2) எதிரிடையாக இருக்கக்கூடாது.

**நம்முடைய ஜீவனைக் கொண்டு தேவனைத் துதித்தல்**

“அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். (2 பேதுரு 3:13-15)

இருளிலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை பூமிக்குரிய நம்முடைய பொறுப்புகளை சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக நாம் தேவனுடைய வார்த்தைகளில் கொடுக்கப்பட்டுள்ள நீதியான கோட்பாடுகளினால் நாம் வழிநடத்தப்பட்டு ஜீவிப்போமேயானால், ஒரு சிறந்த மனுஷனாக நாம் இந்த உலகத்தில் வாழ்ந்து காட்டலாம். நம்முடைய பரலோகப் பிதாவுக்கு மகிமை சேர்க்கும் வகையில் நம்மை சுற்றி உள்ள உலகத்திற்கு சிறந்த கிறிஸ்தவன் என்ற மாதிரியை நம்முடைய வாழ்க்கையில் காண்பிப்போம்.

இப்படியாக நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கை தேவனுக்கு மகிமை சேர்க்கக்கடவது !

நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்கக்கடவது



# கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு பிரதிபலித்தல்

*“நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.” - பிலிப்பியர் 3:20*

**Tom Gilbert**

நம்முடைய உண்மையான குடியுரிமை பரலோகத்தில் இருக்க, நாம் குடியிருக்கும் இந்த உலகத்தில், நம்முடைய பொறுப்புகளும் கடமைகளும் என்ன ?

இந்த உலகத்தை விட்டு நாம் பிரிந்து இருப்பதற்கு சில வசனங்கள் ஊக்குவிப்பதுபோல தோன்றலாம். “அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று விடுவிக்கும்படி நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படியே நம்முடைய பாவங்களுக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்;” (கலாத்தியர் 1:4)

மேலும் “நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாய், உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.” (ரோமர் 12:2) என்று நம்மை துரிதப்படுத்துகிறார்.

“உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.” (1யோவான் 2:15) என்று யோவான் எச்சரிக்கிறார். மேலும் “இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.” (யோவான் 18:36) என்று இயேசு தாமே கூறுகிறார்.

இந்த உலத்தை விட்டு நாம் பின்வாங்குவதற்கு பதிலாக, நாம் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாய் இருக்கிறோம் என்று பவுல் கூறுகிறார். இந்த உலகத்தின் தேசங்களுக்கும் ஜனங்களுக்கும், நாம் எந்த வகையில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்க வேண்டும் ?

### ஜனங்களை மதிப்பிடுதல்

“அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்து இருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.” (1 யோவான் 3:16) என்று யோவான் கூறியிருந்தாலும் இயேசு செய்தது போல கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகிய நாம் ஜனங்களை மதிப்பிட வேண்டும்.

உலகத்திற்காக நம்முடைய ஜீவனைக் கொடுப்பதற்கு அடையாளமாக "மரித்தவருக்காக எடுக்கும் ஞானஸ்நானம்" என்று பவுல் கூறுகிறார். “மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?” (1கொரிந்தியர் 15:29,30 )

உலகத்தின் எந்த அமைப்புகளிலும் உள்ள தொடர்பு நம்முடைய கிறிஸ்துவ குணலட்சனத்தை அழித்து விடக்கூடாது. "மோசம் போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். "(1கொரிந்தியர் 15:31). நாம் அனைவருக்கும் உதவி செய்யவேண்டும் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். “ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக் கடவோம்.” (கலாத்தியர் 6:10)

மேலும் நாம் ஒவ்வொருவரும் கூடுமானவரை ஒன்றுசேர்ந்து நம்முடைய நோக்கங்களைப் பகிர்ந்துகொண்டு, அவைகளை செயல்படுத்த, ஒருவரையொருவர் ஊக்குவிக்கவேண்டும் என்று பவுல் வலியுறுத்துகிறார். "மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்திசொல்லவேண்டும்." (எபிரெயர் 10:24,25)

நாம் இராஜரீகமான ஆசாரியத்துவத்திற்கு அழைப்பு பெற்றிருக்கிறோம். ( 1பேதுரு 2:9) புரிந்து கொள்ளுதலையும் இரக்கத்தையும் அதிகமதிகமாக நமக்குள் வளர்த்துக் கொள்ளுவதற்கு நாம் இந்த உலகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டுள்ளோம். "அன்றியும், மனுஷரில் தெரிந்துகொள்ளப்பட்ட எந்த பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக்

காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனுஷருக்காகத் தேவகாரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான். தானும் பலவீனமுள்ளவனானபடியினாலே, அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப் போனவர்களுக்கும் இரங்கத்தக்கவனாயிருக்கிறான்.

அதினிமித்தம் அவன் ஜனங்களுடைய பாவங்களுக்காகப் பலியிடவேண்டியதுபோல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டியதாயிருக்கிறது." (எபிரெயர் 5:1-3)

"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது, இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத்தேயு 5:14,16) என்று இயேசு கூறுகிறார்.

நம்முடைய கிரியைகள் தேவனை மகிமைப் படுத்தவும், இயேசுவினிடம் மற்றவர்களை வழிநடத்துவதற்கும், வெளிச்சம் வீசுவதற்கும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம். இந்த வெளிச்சத்தை நமக்குள் மட்டுமே வைத்திராமல் வெளியே சென்று பகிரங்கமாக பிரகாசிக்க வேண்டும். (2 தீமோத்தேயு 4:1)

இன்றைக்கு இந்த உலகத்தின் வேதனைகளும், பாடுகளும் நம்மை ஆழமாகத் தொடவேண்டும். மிக அவசரமாய் மருத்துவமனைக்குச் செல்லும் ஒரு ஆம்புலன்சைக் கண்டு நாம் எப்போதாவது கண்ணீர் விட்டுருக்கிறோமா ? மற்றவர்களின் உபத்திரவங்களைக் கண்டு நம்முடைய ஆண்டவர் மிகவும் வியாகுலப்பட்டார். ஆகவே அவர் மனப்பூர்வமாக அனைவருக்காகவும் தன்னுடைய உயிரை ஈடுபலியாகக் கொடுத்தார். (1தீமோத்தேயு 2:6) இப்படிப்பட்ட மனநிலையை நாமும் பெற்றிருக்கவேண்டும்.

நம்மைச் சுற்றி உள்ளோர்களின் ஆவிக்குரிய மற்றும் தற்காலிக தேவைகளுக்கு, முடிந்த வரைக்கும் உதவிச் செய்யவேண்டும். மாறாக, இப்படிப்பட்ட பொறுப்பில் இருக்கும் நாம் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யும் வாய்ப்பை புறக்கணிக்கக் கூடாது. முதலாவது கிறிஸ்துவோடு கூட நல்ல ஐக்கியத்தையும், அதற்குபின் தேவனோடு நல்லுறவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அடுத்தபடியாக, கிருபையினாலும், இரக்கத்தினாலும் அன்பினாலும் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக அவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டும். (2 கொரிந்தியர் 5:11-21) இயேசுவோடு ஒரு நல்ல ஐக்கியத்தை ஸ்தாபிப்பதற்கு மற்றவர்களை அழைப்பதே, கிறிஸ்துவின் பிரதிநிதிகளின் சிறப்பான செயலாகும்.

**மற்றவர்களுக்கு ஊழியம் செய்தல்**

நம்முடைய பணி ஜெபத்திற்கும் அப்பாற்பட்டதாய் இருக்கவேண்டும். அநேக நேரங்களில் ஜெபம் மட்டும் அல்ல நேரடியான உதவிகளும் தேவைப்படுகிறது. சிறிய காரியங்கள் கூட இதில் அடங்கும்.

நாம் தேவனிடத்திலிருந்து ஆறுதல் பெற்றிருப்பது போல, மற்றவர்களுக்கு ஆதரவாய் இருக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார்." நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர்." (2 கொரிந்தியர் 1:3,4)

நாம் பெறக்கூடிய பாடங்கள் வரக்கூடிய கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தில் பயன்படுத்துவதற்கு மாத்திரமல்ல மாறாக வருங்காலத்தில் நடக்கக் கூடிய மிகப்பெரிய வேலைகளுக்கு மற்றவர்களை ஆயத்தப்படுத்துவதற்காகவும் நாம் கற்றுக் கொள்ளுகிறோம். "நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதானஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்." (எபிரெயர் 4:15)

நாம் இரக்கத்தை எவ்வாறு காட்டவேண்டும் ? இருள் நிறைந்த உலகத்தில் நாம் எப்படி வெளிச்சம் வீசக்கூடும் ? அன்பு, இரக்கம், கனிவு போன்றவகளை எவ்வாறு செயல்படுத்தமுடியும் ?

முதலில் மற்றவர்களுக்காக நாம் கொண்டுள்ள அன்பு உதட்டளவில் இல்லையென்று நாம் நிரூபிக்க வேண்டும். மற்றவர்களுக்கு உதவி செய்வதற்கு தேவனுடைய கிருபையினால் நாம் திறன் பெற்றிருந்தால் அதை கட்டயமாகச் செய்ய வேண்டும். கிறிஸ்துவினிமித்தம் வாய்ப்புகள் கிடைக்கும் போது நம்முடைய சொந்த நேரத்தையும், நாம் ஒப்புக்கொடுக்கிறோம் என்று பொருள்படலாம்.

நம்முடைய அனுபவங்கள் பொதுவாக அனைவரும் பெறக்கூடியது. இப்படிப்பட்ட அனுபவங்கள் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியை திசைத் திருப்புவதற்கு அல்ல, மாறாக அதை ஊக்குவிப்பதற்காகவே பெறுகிறோம். இந்த பிரதிநிதியின் அனுபவங்களின் மூலம் உபத்திரவத்தினால் பாரப்படுகிற்

வர்களுக்கு நாம் ஆறுதல் அளிக்கக்கூடியவர்களாய் இருப்போம்.

இந்த அனுபவங்கள் நமக்குள் அகாபே அன்பை அதிகமாக வளர்ச்சியடைய உதவுகிறது. நம்முடைய சகல மனிதர்களிடம் மட்டுமல்ல நம்முடைய எதிராளிகளாய் கருதப்படுகிறவர்களிடமும், சுயநலமற்ற அன்பை வெளிப்படுத்தவேண்டும். இப்படிப்பட்ட அன்பின் முக்கியத்துவத்தைக் குறித்து பவுல் பேசுகிறார். "ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான். எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவுசெய்யா திருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும்

அன்புகூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது." (ரோமர் 13:8, 9) லூக்கா 10:25-37 என்று கேள்வி எழுப்பின நியாயசாஸ்திரியிடம் இயேசு சரியாகப் பதிலளித்தார்.

கிறிஸ்தவர்கள் நற்கிரியைகளைச் செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை பேதுருவும் பவுலும் தொடர்ந்து நினைப்பூட்டுகிறார்கள். (1பேதுரு 2:12; எபேசியர் 2:10; 1 தீமோத்தேயு 6:18; 2 தீமோத்தேயு 3:17; தீத்து 3:8, 14; 10:24) இப்படிப்பட்ட பலியின் ஜீவியத்தில் தேவன் பிரியப்படுகிறார். (பிலிப்பியர் 13:16)

"திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது." (யாக்கோபு 1:27)

**இருளுக்குள் வெளிச்சம்**

கிறிஸ்துவ வாழ்க்கையில் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக ஜீவிப்பவர்கள் தனிப்பொறுப்புகளை உடையவர்களாய் இருக்கிறார்கள். நம்முடைய பிதாவைக் குறித்தும், இரட்சகராம் இயேசு கிறிஸ்துவைக் குறித்தும், தெளிவான வரைப்படத்தை மற்றவர்களுக்குக் காண்பிக்கக் கூடிய அளவுக்கு நாம் வெளிச்சத்தைப் பிரகாசிக்க வேண்டுமா ? இயேசு இந்த உலகத்தின் மனுக்குலத்திற்காக ஜீவனைக் கொடுத்தார், என்பதை பல நோக்கங்களில் பிரிந்திருக்கக்கூடிய இந்த மனுக்குலத்திற்கு நாம் பகிரங்கமாய் அறிவிக்கக் கூடுமா? நொறுங்குண்ட இருதயத்திற்கு ஆறுதல் அளிக்கவேண்டும் என்பதை உண்மையில் நாம் உணருகிறோமா? நம்மிடம் உதவி பெற்றவர்கள்,தேவனை மகிமைப்படுத்தும் அளவுக்கு நம்முடைய நற்கிரியைகள் பெருகியிருக்கிறதா ? (மத்தேயு 5:16)

"உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே. உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்.

இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.

உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா?

உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா?

ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்." (மத்தேயு 5:42-48) என்று நம்முடைய ஆண்டவரின் எச்சரிப்பை அனைவரும் ஏற்றுக்கொள்ளுவோமாக.

# நீதியும், மன்னிப்பும்



*பலியிடுவதைப்பார்க்கிலும், நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்."*
*- நீதிமொழிகள் 21:3*

நீதி எவ்விடத்திலிருந்து வரும் ? "கூடுமானவரைக்கும் அனைவரின் பார்வையிலும் நன்மையானதை செய்ய நாடுங்கள்" என்பதே இந்த வார்த்தையின் பொருளாக இருப்பினும், நீதி மற்றும் நியாயத்தை முடிவு செய்பவர் யார்? ஒரு பகுதியின் ஆட்சி அமைப்பு சட்டங்களை உருவாக்கி அதன் எல்லைகளுக்குள் அதை அமுல்படுத்தி அந்த சட்டத்திற்கு உட்படாதவர்களுக்குக் குறிப்பான தண்டனைகளைக் கொடுத்து, அவர்களை மீண்டும் சீர்ப்படுத்த முயற்சிகள் அனைத்தையும் அவர்கள் கட்டுக்குள் வைப்பதை நாம் காணலாம்.

ஆட்சிக்குரிய இவர்கள் சட்டத்தை மீறுவதாகக் குற்றம் சாட்டப்படுபவர்களைத் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொள்கிறார்கள். இந்த குற்றங்கள் சரியாக நிரூபிக்கப்படுவதற்கு அனைவருக்கும் முன்பாகவும் அந்த வழக்கு நடத்தப்படுகிறது. அந்த நபரின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் அதற்கான தீர்ப்பை நிர்ணயிக்கும் பொறுப்பில் உள்ளனர். ஒருவேளை அபராதம் கட்டும் அளவிற்கு சிறிய குற்றமாக இருக்கலாம். குற்றங்களுக்கு தகுந்த தண்டனை விதிக்கப்படும். ஆகவே , தண்டனையைத் தவிர்த்துக் கொள்வதற்கும் ஆட்சிக்குரிய பொறுப்பில் இருப்பவர்களின் பாதுகாப்பைப் பெறுவதற்கும் ஜனங்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படிகிறார்கள்.

**தேவனுடைய நீதியான அமைப்பு**

ஆதிமனிதன் குடியிருந்த பகுதிக்கு நம்முடைய பரலோக பிதா ஒரு நீதியான ஒழுங்கு முறையை ஸ்தாபித்திருந்தார். அவருடைய பிரமாணம் மிக எளிமையாக இருந்தது - கீழ்ப்படிந்து ஜீவித்தல்.

இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், "தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." (ஆதியாகமம் 2:16,17) கீழ்ப்படியாமையின் தண்டனை மரணம் என்று அவரால் சொல்லப்பட்டது. தேவனுடைய இந்த சட்டத்திற்கு ஆதாம் மற்றும் ஏவாள் கீழ்ப்படிந்தவரைக்கும் தேவன் அவர்களைப் பாதுகாத்து அவர்களுடைய சகல தேவைகளையும் கொடுத்தார். காலப் போக்கில் அவர்கள் சட்டத்திற்குக் கீழ்ப்படியாமல் போனபோதோ தேவன் முன் அறிவித்த தண்டனையை செயல்படுத்தினார். இவர்கள் தோட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அதற்குப் பின் அவர்கள் மரிக்கத் துவங்கினார்கள். மேலும் அவர்கள் பரம பிதாவோடு கொண்டிருந்த நெருக்கமான உறவையும் இழந்தார்கள்.

பல வருடங்களுக்குப் பின் ஒரு முழு தேசமாக இஸ்ரயேலோடு பிதாவாகிய தேவன் ஒரு புதிய நீதியின் ஒழுங்கு முறையை ஸ்தாபித்தார். அவருடைய பிரமாணங்களைக் கடைப்பிடிப்பதற்கு அவர்களும் ஒத்துக்கொண்டனர். (யாத்திராகமம் 19:1-8) மோசேயின் வழியாக இந்த புதிய நீதியின் அமைப்பிற்கான அஸ்திபாரத்தை தேவன் கொடுத்தார் - பத்து கற்பனைகள். இந்த பிரமாணங்கள் மிக எளிமையானது. அவருடைய பிரமாணங்களை மீறி நடப்பவர்களுக்குக் குறிப்பிட்ட தண்டனைகளையும் நியமித்தார். அநேக முறை இவர்கள் கீழ்ப்படியாதபோது இவர்கள் தண்டிக்கப்படுவதற்குப் பதிலாக மிருகங்கள் பலியிடப்பட்டது.

பத்து கட்டளைகளும் புரிந்து கொள்வதற்கு எளிதாக இருந்த போதிலும் அந்த பிரமாணங்களுக்குள் அடக்கப்பட்டிருந்த 3600 சட்டங்களின் விபரங்களை யூத மத போதகர்கள் மற்றும் தலைவர்கள் இஸ்ரயேல் ஜனங்களுக்கு விவரித்தார்கள். சட்டத்தை மீறுவதினால் செலுத்த வேண்டிய பலிகளைக் குறித்த பொறுப்பு ஆசாரியர்களிடம் கொடுக்கப்பட்டது. ஆயினும், ஜனங்களின் பாவங்களைப் போக்குவதற்கு மிருகங்களின் இரத்தம் போதுமானது அல்ல என்று வசனங்கள் கூறுகிறது (எபிரெயர் 10 :4) காலப்போக்கில் யூத ஜாதி தேவனுடைய உடன்படிக்கைக்கும் அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிவதை விட்டு விலகினார்கள்.

பல வருடங்களுக்குப் பின் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கக்கூடிய மற்ற வகுப்பாரோடு தேவன் ஒரு நீதியின் முறையான ஒழுங்கை ஸ்தாபித்தார். மனுஷனாக வாழ்ந்து முழு மனுகுலத்திற்கும் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுப்பதற்கு அவருடைய ஒரே பேறான குமாரன் இயேசுவை அனுப்பினார். இந்த புதிய நீதியின் ஒழுங்குமுறை பத்து பிரமாணங்களைக் காட்டிலும் எளிமையாக இருந்தது. ஏனெனில், இது இரண்டு அடிப்படையான பிரமாணத்தைக் கொண்டிருந்தது - பிதாவாகிய தேவனை உன் முழு இருதயத்தோடு அன்பு செலுத்தவேண்டும், உன்னை போல பிறனையும் நேசிக்கவேண்டும். பழைய ஏற்பாட்டில் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் முழுவதும் இந்த இரண்டு பிரமாணங்களுக்குள் அடங்கும் என்று இயேசு கூறுகிறார். (மத்தேயு 22:40)

அதற்கு பின் தன்னுடைய சீஷர்களுக்காக மூன்றாவது பிரமாணத்தைக் கற்பித்தார். “நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.”யோவான் 13:34)

இயேசுவின் நீதியின் ஒழுங்கு முறை, அன்பு என்ற அஸ்திபாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த மூன்று கற்பனைகளும் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட்டாலும் இதை பற்றிய மேலும் விபரங்கள் இன்னும் அதிகமாக விவரிக்கப்பட்டுள்ளது. முன்பு கொடுக்கப்பட்ட கற்பனைகள் தண்டனைகளைத் தவிர்ப்பதற்காகக் கீழ்ப்படிய வேண்டியதாயிருந்தது. இயேசுவினால் கொடுக்கப்பட்ட கற்பனைகளுக்கும் முன் கொடுக்கப்பட்ட கற்பனைகளுக்கும் ஒரு முக்கிய வேறுபாடு இருந்தது. கீழ்ப்படியாமைக்குத் தண்டனைக் கொடுப்பதற்குப் பதிலாக இரக்கத்தையும், மன்னிப்பையும் கொடுக்கும்படி இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்தார். முன் கொடுக்கப்பட்ட பிரமாணங்களில் இருந்து இது முற்றிலும் வேறுபாடானது. கண்ணுக்கு கண், பல்லுக்குப் பல் என்ற கற்பனைகளுக்குப் பதிலாக ஒரு கன்னத்தில் அறைந்தால், மறு கன்னத்தையும் காட்டு என்று சீஷர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டது. (மத்தேயு 5:38, 39 “உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. “ (மத்தேயு 5:40)

இப்படியாக இயேசு பகையையும், தீமையையும் அன்பினால் வெல்வதற்குக் கற்றுக் கொடுத்தார். இரக்கமுள்ள மன்னிப்பு இந்த அன்பின் விளைவாயிருந்தது.

**மன்னிக்காத ஊழியக்காரன்**

மற்றவர்களை மன்னிக்க வேண்டும் என்ற போதனையை கிறிஸ்துவின் சீஷர்கள் தெளிவாக அறிந்திருந்தும். “அப்பொழுது, பேதுரு அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும்? ஏழுதரமட்டுமோ என்று கேட்டான்.” (மத்தேயு 18:21) என்று பேதுரு கேள்வி எழுப்பினார். துவக்கத்தில் ஏழு முறை மன்னித்தால் போதும் என்று பேதுரு ஆச்சரியப்பட்டார். ஆனால் இயேசு ஏழு முறை அல்ல ஏழு ஏழுபது முறை அதாவது எண்ணிக்கைக்கு அடங்காத முறைகள் மன்னிக்க வேண்டும் என்று பதிலளித்தார். (வசனம் 22) அதற்குபின் எண்ணிலடங்கா குறை மன்னிப்பதற்கான கோட்பாட்டைக் குறித்து ஒரு உவமையைச் சொன்னார்.(மத்தேயு 18: 23- 35)

ஒரு ஊழியக்காரன் ராஜாவிடம் 10,000 தாலந்து கடன்பட்டு இருந்தார். இக்காலத்தில் இது ஒரு பெரிய தொகையாக இல்லாத போதிலும் இயேசுவின் காலத்தில் ஒரு தாலந்து 15-ல் இருந்து 20 வருடங்களுக்கு உண்டான ஒருவருடைய கூலியாய் இருந்தது. இவ்வளவு பெரிய கடனை திருப்பிக் கொடுக்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதிருந்தது. அந்த கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் அவனுடைய மனைவி, மக்கள் உட்பட அனைத்தையும் விற்று கடனைத்தீர்க்கும்படி இராஜா கட்டளையிட்டார்.

இது நியாயமான தீர்ப்பாகக் காணப்பட்டது. நியாயமான முறையில் கடனை தீர்ப்பதற்கான வழி அறிவிக்கப்பட்டது. இந்நாளிலும் இப்படிப்பட்ட காரியங்களை நாம் காணலாம். தன்னுடைய அனைத்தையும் விற்று கடனைத் தீர்க்க வேண்டும் என்ற நிர்பந்தம் ஏற்பட்ட போது, அந்த ஊழியக்காரன் இராஜாவின் கால்களில் விழுந்து இரக்கத்திற்காகக் கெஞ்சினான்.

இராஜா மிகவும் கலங்கினார். கடனைத் தீர்ப்பதற்கான கால அவகாசத்திற்குப் பதிலாக அந்த இராஜா முழுமையான இரக்கம் காட்டி, முழு கடனையும் மன்னித்து விட்டார். இது உண்மையில் ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு பெரிய கடன் சுமை தன் தோளில் இருந்து இறக்கப்பட்டபின் அவன் எவ்வளவு சந்தோஷம் அடைந்திருக்கவேண்டும் ? பார்த்த அனைவரையும் கட்டி

அணைத்து, தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டு அந்த இராஜாவை முழு மனதோடு போற்றியிருக்க வேண்டும். ஆயினும் அவன் இப்படிப்பட்ட காரியங்கள் எதையும் செய்யவில்லை.

அதற்கு பதிலாக, அந்த ஊழியக்காரன் தன்னிடம் கடன்பட்டவரிடம் சென்று (100 தினாரி - 3 மாத கூலி) முழுமையாக அந்த கடனைக் கேட்டான். கடனைத் தீர்க்கும் நியாயமான முறையை இந்த ஊழியக்காரனும் கைக் கொண்டான். இராஜாவினிடத்தில் இவன் மன்றாடியது போல, இவனிடமும் கடன்பட்டவன் மன்றாடினான். ஆனால், இரக்கமற்ற இந்த ஊழியக்காரன் அந்த மனிதனை சிறையில் அடைத்தான்.

நீதியின் ஒழுங்கு முறையின் கீழ் அந்த ஊழியக்காரன் அவனுடைய உரிமைகளைப் பெற்றிருந்தான். அவன் கடனைத் தீர்க்க வேண்டிய நிர்பந்ததிற்குத் தள்ளப்பட்டான். கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத பட்சத்தில் சட்டப் பூர்வமாக அவன் சிறையிலும் அடைக்கப்படலாம். ஆயினும் இந்த உவமை நியாயமான சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு அல்ல, இரக்கத்தைக் காட்டுவதற்காக குறிப்பாக இயேசுவால் சொல்லப்பட்டது. நியாயமாக இவ்வளவு பெரிய கடன் தீர்க்கப்பட்டபின் கடன்பட்டவரின் மனநிலை நிச்சயமாக மாறியிருக்க வேண்டும். அவனிடம் கடன்பட்டவர்களுக்கு அவனும் இப்படிப்பட்ட இரக்கத்தைக் காண்பித்திருக்க வேண்டும். இரக்கம் காண்பிக்கப் பட்டது, அதே இரக்கம் எதிர்பார்க்கப்பட்டது.

நாம் ஒவ்வொருவரும் 10, 000 தாலந்து கடன்பட்ட ஊழியக்காரனுக்கு ஒப்பாக இருக்கிறோம். ஏனெனில் நாம் பெற்ற கடனை எந்த சூழ்நிலையிலும் நம்முடைய பரமபிதாவிடம் திருப்பி செலுத்த முடியாது. தேவனுடைய நீதி பாவிகளின் மரணத்தை பதிலாக எதிர்பார்க்கிறது - முழுமையான நித்திய மரணம். நாம் அனைவரும் இந்த தீர்ப்புக்கு உட்பட்டவர்கள். (ரோமர் 5:12) தேவனுடைய நியாயத்தீர்ப்பு தொடர்ந்திருந்தால் இந்த முழு மனுக்குலமும் முழுமையாக அழிந்திருக்கும். ஆயினும், நம்முடைய மிகப்பெரிய கடனை மன்னிப்பதற்கு தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனையே கொடுத்தார். ஆகவே மற்றவர்களை மன்னித்து தேவனுடைய எடுத்துக்காட்டைப் பின்பற்ற வேண்டும் என்று நம்மிடம் எதிர்பார்க்கப்படுகிறது. இதுவே நம்முடைய ஜெபங்களின் அஸ்திபாரமாகும். (மத்தேயு 6 :12)

இயேசு கொடுத்த இந்த மாதிரியின்படி நமக்குள் இரக்கம் என்ற குணலட்சணத்தை வளர்த்துக் கொள்வது மிக அவசியமாகும். நாம் இரக்கத்தில் பெருகுவதற்கு மட்டும் முயற்சிக்காமல் அதை விரும்பி நேசிக்கவும் வேண்டும். ஏனெனில், இது தேவனுடைய ஒரு முக்கிய குணாதிசயமாய் இருக்கிறது. (மீகா 6:8) இதை நாம் கற்றுக் கொள்ளாமல், இப்பொழுது இரக்கம் காண்பிக்காமல் இருந்தால், கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மெல்கிசெதேக்கின் முறைமையின்படி ஆசாரியத் துவத்திற்கு தகுதியற்றவற்றகளாகிவிடுவோம். ஆகவே இந்த யுகத்தில் இரக்கத்தை சிநேகித்து, அதில் வளர்ச்சியடைவது மிக முக்கியமானதாகும்.

தேவனிடத்தில் அன்பு கூறுவது, உங்களைப் போல் பிறரை நேசிப்பது, மற்றும் சகோதரரை நேசிப்பது என்ற இந்த மூன்று கோட்பாடுகளின் அடிப்படையில் நம்முடைய நீதியும், நியாயமும் அமைந்திருக்க வேண்டும். மற்றவர்களை மன்னிக்கும் பட்சத்தில் நம்முடைய தண்டனையைக் குறித்து கவலைப்பட வேண்டாம். ஆயினும், நாம் மற்றவர்களின் குற்றத்தை மன்னியாதிருந்தால் தேவன் ஒருபோதும் நம்முடைய குற்றத்தையும் மன்னிக்கமாட்டார். (மத்தேயு 6:15)

நாம் எல்லாவற்றிலும் நம்முடைய பரலோகப் பிதாவினிடத்தில் கடமைப் பட்டிருக்கிறோம். இந்த உலகத்தில் அநீதிகளை அனுபவிப்பதற்கு நம்மை அனுமதித்து அவருடைய அன்பைப் புரிந்து கொண்டு நித்தமும் அவர் நம்முடைய கடன்களை மன்னித்துக் கொண்டிருக்கிறார். வரக்கூடிய கிறிஸ்துவின் இராஜ்யத்தில் மனுக்குலத்தின் பாவங்கள் மன்னிக்கப் பட்டு சகலவிதமான அநீதியும் வெளியேற்றப்பட்டு இரக்கமும், அன்பின் பிரமாணமும் தலைமை வகித்து, ஆட்சி செய்யும் என்பதை கிறிஸ்துவின் பிரதிநிதிகளாகிய நாம் இன்று மகிழ்ச்சியோடு அறிவிக்கலாம். இன்று இப்படிப்பட்ட இரக்கத்தை நம்முடைய வாழ்க்கையில் செயலாற்றி பரலோகப் பிதாவின் அன்பை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவோம். இன்று நம்மிடம் கடன்பட்டோரை இப்பொழுது இருக்கும் நிலைமையில் அல்ல, மாறாக தேவனுடைய இராஜ்யத்தில் இரக்கத்தின் வழியாக பூரணப்பட்ட நிலைமையில் நாம் அவர்களைக் காணலாம்.

# அதிகாரத்தை கனப்படுத்துதல்



*"அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்." - லூக்கா 20:25*

**Graeme smith**

கிறிஸ்தவர்கள் தேவன் மேல் வைக்கும் விசுவாசத்திற்கும் அவர்கள் குடியிருக்கும் தேசத்தின் அதிகாரிகளுக்கும் அவர்கள் கொடுக்கும் ஆதரவுக்கும் உள்ள தெளிவான வித்தியாசத்தை இயேசு பிரதான ஆசாரியர்களுக்கும், பரிசேயர்களுக்கும் சொல்லப்பட்ட பதிலில் விளக்கமளித்தார். அரசாங்கத்தின் கடனை கிறிஸ்தவர்கள் மறுக்கக்கூடாது. இவைகள் இரண்டிற்கும் இடையில் பிரச்சனைகள் ஏற்படும்பொழுது தேவனுடைய பார்வையில் நியாயமாய் இருக்கும் விஷயத்தில் குழப்பமடையவும் கூடாது. ஒரு நாணயத்தைக் காண்பித்து சீசருக்கு செலுத்த வேண்டியதை இயேசு காட்டினார். ஆனால் தேவனுக்குச் செலுத்த வேண்டிய காரியங்களை அவர் தெளிவாய் விவரிக்கவில்லை. இவ்விரண்டையும் வேறுபடுத்தி தெளிவாய் புரிந்துகொள்வதற்கு நாம் ஒவ்வொருவரும் வசனங்களில் உள்ள ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும்.

"இராயனுக்கு வரிகொடுக்கிறது நியாயமோ அல்லவோ, எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்." (லூக்கா 20:22) என்ற கேள்வி கேட்கப்பட்டது. இங்கு "வரி" என்ற வார்த்தை "ஃபோரோஸ்" என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாகும். (ஸ்டாரங்க்ஸ் - 5411) இந்த கேள்விக்கான விடையை இயேசு நேரடியாக பதில் அளிக்காவிட்டாலும் அரசாங்கத்திற்கு வரி செலுத்தவேண்டும் என்ற அவசியத்தைக் குறிப்பிட்டார்.

பரிசேயர்கள் சிறுமந்தையின் அங்கத்தினராக இராததினால் இயேசு அவர்களை வரி செலுத்தச் சொன்னார் என்றும், கிறிஸ்தவர்களுக்கு இந்த கற்பனை கொடுக்கப்படவில்லை என்றும் சிலர் வாக்குவாதம் செய்யலாம். ஆயினும், இயேசுவின் பதில் கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும் என்று பவுல் உறுதியளிக்கிறார். "இப்படியானால், யூதனுடைய மேன்மை என்ன? விருத்தசேதனத்தினாலே பிரயோஜனம் என்ன? அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது; தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே. அப்படிச் சொல்லக்கூடாது; சொல்லக்கூடுமானால், தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பதெப்படி?

அன்றியும், என் பொய்யினாலே தேவனுடைய சத்தியம் அவருக்கு மகிமையுண்டாக விளங்கினதுண்டானால், இனி நான் பாவியென்று தீர்க்கப்படுவானேன்? "(ரோமர் 13:1,2,6,7)

பவுலின் வாக்கியங்கள் வரி செலுத்துவதற்கும் அப்பாற்பட்ட சில காரியங்களை இன்றைய கிறிஸ்தவர்களுக்கு வலியுறுத்துகிறது. "தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது." என்ற வசனம் மனுக்குலத்தின் சகல காரியங்களும் தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைக் காட்டுகிறது. தேவன் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மனுஷருடைய செயல்களை தன்னுடைய கட்டுக்குள் வைத்து செயல்படுகிறார். நேபுகாத்நேச்சார் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாவார்.

2 இராஜாக்கள் 24 மற்றும் 25ம் அதிகாரங்களில் உள்ள நீண்ட வரலாற்றை இங்கு சுருக்கமாகக் கொடுத்துள்ளோம். -

"கர்த்தர் நேபுகாத்நேச்சாரைக்கொண்டு யூதா ஜனங்களையும் எருசலேமியரையும் சிறைபிடித்துக் கொண்டு போகச் செய்தபோது யோசதாக்கும் சிறைப்பட்டுப்போனான்." (1நாளாகமம் 6:15) தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அவர் நேபுகாத்நேச்சாரைப் பயன்படுத்தினார். மேலும் அவரை என்னுடைய ஊழியக்காரன் என்று அழைக்கிறார். (எரேமியா 27:6) இதை எஸ்றா உறுதிப்படுத்துகிறார். "எங்கள் பிதாக்கள் பரலோகத்தின் தேவனுக்குக் கோபமூட்டினபடியினால், அவர் இவர்களைப் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் என்னும் கல்தேயன் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவன் இந்த ஆலயத்தை நிர்மூலமாக்கி, ஜனத்தைப் பாபிலோனுக்குக் கொண்டுபோனான்." (எஸ்றா 5:12) தேவனுடைய ஜனங்களை நேபுகாத்நேச்சார் அதிகமாக நெருக்கினாலும், அவர் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றினார். பவுலின் நாட்களில் தேவனுடைய வல்லமை மிக ஞானமாய் பயன்படுத்தப்பட்டது என்பதை மேற்கூறப்பட்டுள்ள சரித்திர சுருக்கத்தின் மூலமாய் அறிந்து கொள்ளலாம்.

இந்த உலகத்தின் காரியங்களைப் பொருத்தவரையில் இந்த யுகத்தின் கடைசி காலத்தில்

தேவனுடைய கட்டுப்பாடு நேரடியாக இல்லை என்று ஒருவர் எண்ணலாம். எருசலேமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த புறஜாதி வல்லமைகள், இஸ்ரேயலின் நியாயமான தண்டனை காலம் நிறைவேற்றுவதற்காக தேவனால் அனுமதிக்கப்பட்டது. உண்மையில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்ட காரியங்கள் நம்முடைய காலத்தில் மீண்டுமாக இஸ்ரயேல் ஜனங்கள் கூட்டிச்சேர்க்கப்படும் காரியங்கள் சிறப்பாய் நடந்துகொண்டு வருகிறது. அதற்கு பின் இஸ்ரயேலுக்கு விரோதமாய் சகல ஜாதிகளும் ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

“இதோ, யூதாவுக்கும் எருசலேமுக்கும் உண்டாயிருக்கிற சிறையிருப்பை நான் திருப்பும் அந்நாட்களிலும் அக்காலத்திலும்,நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரவேலென்னும் என் சுதந்தரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என் தேசத்தை பங்கிட்டுக்கொண்டதினிமித்தமும்,” (யோயேல் 3:1,2,7,8) யூதர்கள் மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்டு, 1948-ம் வருஷத்தில் அவர்கள் ஒரு தேசமாக உருவாகுவதைப் பற்றி யோயேல் பேசியிருக்கிறார்.

“இதோ, நான் மீன்பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள்; அதற்குப் பின்பு வேட்டைக்காரராகிய அநேகரை அழைத்தனுப்புவேன், இவர்கள் அவர்களை எல்லாமலைகளிலும்,

எல்லாக்குன்றுகளிலும், கன்மலைகளின் வெடிப்புகளிலும் வேட்டையாடுவார்கள்.” (எரேமியா 16:16) இஸ்ரயேல் ஜனங்களைக் கூட்டிச் சேர்ப்பதற்கு பிதாவாகிய தேவன் வேட்டைக்காரர்களையும், மீன்பிடிப்பவர்களையும் பயன்படுத்துகிறார். அதே நேரத்தில் இஸ்ரயேலுக்கு விரோதமாய் மற்ற தேசங்களையும் கூட்டிச் சேர்த்துக் கொண்டிருக்கிறார். (ஏசாயா 34:4) ஆகவே இப்படிப்பட்ட சம்பவங்கள் இந்நாளிலும் தேவன் சகல காரியங்களையும் நடத்திக் கொண்டு வருகிறார் என்று நிரூபிக்கிறது.

## ஆயுதங்களை சுமத்தல்

பொது ஜனங்களின் பெரும்பாலான வரிப்பணங்கள், இக்காலத்தில் யுத்தங்களுக்கும், போர்களுக்கும் அதிகமதிகமாய் செலவழிக்கப்படுகிறது. பவுலின் கட்டளைகளுக்கு இந்த காரியங்கள் முரண்பாடாகத் தெரிகிறது.”ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்.”

(1தெசலோனிக்கேயர் 5:15) ஒரு தேசம் தேவனால் ஆட்சி செய்யப்பட்டால் ஒரு கிறிஸ்தவன் எதற்காக ஆயுதம் சுமக்க வேண்டும்? அல்லது எதற்காக தன்னுடைய பணத்தை யுத்தங்களுக்கு செலவழிக்க வேண்டும். தேவன் மற்ற ஜாதிகளை அழிப்பதற்கு இஸ்ரயேலின் சேனைகளை அனுப்பினார். “நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் பிரவேசிக்கப்பண்ணி, உன்னைப்பார்க்கிலும் ஜனம் பெருத்த ஜாதிகளாகிய ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், கானானியர், பெரிசியர், ஏவியர், எபூசியர் என்னும் ஏழு பலத்த ஜாதிகளை உனக்கு முன்பாகத் துரத்தி, உன் தேவனாகிய கர்த்தர் அவர்களை உன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, அவர்களை முறிய அடித்து, அவர்களைச் சங்காரம் பண்ணக் கடவாய்; அவர்களோடே உடன்படிக்கை பண்ணவும் அவர்களுக்கு இரங்கவும் வேண்டாம்.” (உபாகமம் 7:1,2) ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தில் இஸ்ரயேல் ஜாதி ஆட்சி அமைக்க இது மிகவும் அவசியமாயிருந்தது. (ஆதியாகமம் 17:8, யாத்திராகமம் 23:20 -23) ஆனால் இயேசு தன்னுடைய பாதுகாப்புக்காகக் கூட ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடாது என்று வலியுறுத்தினார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அகப்படும் ஒவ்வொருவரும் முதலில் தேவனுக்கு ஏற்ற சாட்சியாக இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும். கூடுமானால் மரணம் நேரிட்டாலும் தேவனுடைய சித்தம் மட்டுமே செய்ய உறுதியாக இருக்க வேண்டும். (வெளிப்படுத்தல் 2:10) ஆலோசனை சங்கத்தினருக்கு சத்தியத்தை நேரடியாக அறிவித்ததினிமித்தம் ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டார் (அப்போஸ்தலர் 6:8-10; 51-60) தங்களுடைய விசுவாசத்திற்காக மரிப்பதற்கும் ஆயத்தமாக இருக்கிறோம் என்று பேதுருவும், பவுலும் அறிவித்தாக்ள். (2 பேது 1:14; அப்போஸ்தலர் 21:13) கடந்த காலங்களில் யுத்தங்களில் கலந்து கொள்ளாதோர் மரிப்பதற்கு அல்ல, சிறையில் அடைக்கப்படுவதற்கு தீர்ப்பளிக்கப்பட்டார்கள். சில நேரங்களில் துன்புறுத்தப்பட்டார்கள். ஸ்தேவான், பேதுரு மற்றும் பவுலைப் போல நாமும் நம்முடைய விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கையிடுவதற்கு வாய்ப்புகளைத் தேட வேண்டும்.

## சட்டத்திற்கு உட்பட்ட கீழ்படிதல்

“நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லா பக்தியோடும்

நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது." (1தீமோத்தேயு 2:1-3)

சமாதானமும், அமைதியும் தேவனுடைய நீதியான ஒழுங்கின் உரைக்கல்லுகளாக இருக்கிறது. "நீ போய், இஸ்ரவேலின் மூப்பரைக்கூட்டி, அவர்களிடத்தில்: ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவனாயிருக்கிற உங்கள் பிதாக்களுடைய தேவனாகிய கர்த்தர் எனக்குத் தரிசனமாகி, உங்களை நிச்சயமாய்ச் சந்தித்து, எகிப்தில் உங்களுக்குச் செய்யப்பட்டதைக் கண்டேன் என்றும், அவர்கள் உன் வாக்குக்குச் செவிகொடுப்பார்கள்; அப்பொழுது நீயும் இஸ்ரவேலின் மூப்பரும் எகிப்தின் ராஜாவினிடத்தில் போய்: எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் எங்களைச் சந்தித்தார்; இப்பொழுதும் நாங்கள் வனாந்தரத்தில் மூன்றுநாள் பிரயாணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படி எங்களைப் போகவிடவேண்டுமென்று சொல்லுங்கள்." (யாக்கோபு 3:16, 18) "தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது."(1கொரிந்தியர் 14:33) என்று பவுல் எழுதுகிறார். "கூடுமானால் அனைவரோடும் சமாதானமாயி ருங்கள்" என்று நாம் கட்டளை பெற்றிருக்கிறோம். (எபிரெயர் 12:14)

எதிரிகள் மேல் வெற்றி பெறுவதற்கும் (அதிகாரங்கள் ) பூமிக்குரிய காரியங்களில் மேன்மை பெறுவதற்கும் நாம் என்றும் ஜெபிக்கக் கூடாது. மாறாக, அனைவரும் சமாதானமாய் ஜீவிப்பதற்கு "மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியை களுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்;

ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும்." (ரோமர் 13:3) தொழிலாளிகள் தங்கள் எஜமான்களுக்கு உண்மையாய் இருக்க வேண்டும் என்று பவுல் கூறுகிறார்.

"அடிமையாய் நீ அழைக்கப்பட்டிருந்தால், கவலைப்படாதே; நீ சுயாதீனனாகக்கூடுமனால் அதை நலமென்று அநுசரித்துக்கொள்." (1 கொரிந்தியர் 7:21)

சமயச் சார்பற்ற வல்லமைகள் சமுதாயத்தில் என்றுமே பிரபலமாய் இராத பட்சத்திலும், கிறிஸ்தவர்கள் தேவனுடைய திட்டத்தை தங்களுடைய மனதில் இருந்து எடுத்துவிடக்கூடாது.

"புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்." (1 பேதுரு 2:12)

ஒரு கிறிஸ்தவனின் ஒவ்வொரு கிரியைகளும், அதன் செயல்பாடுகளும், "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார் என்றான்." (அப்போஸ்தலர் 17:31) என்ற தேவன் குறித்த அந்த நாளை மையப்படுத்தியே இருக்க வேண்டும். அந்த நாளை "சந்திப்பின் நாள்" என்று பேதுருவும் குறிப்படுகின்றார். (1பேதுரு 2:12)

அரசாங்கங்கள் சமாதானத்தையும், நிலைவரமான காரியங்களையும் கொடுக்கிறது. இந்த சமாதானம், ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்குவிக்கும். "இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும் இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவ ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்." (2 கொரிந்தியர் 6:3) என்று பவுல் எழுதுகிறார். ஒருவருடைய நடத்தை தேவனுடைய சத்தியத்தை ஒருபோதும் குற்றம் சாட்டக்கூடாது.

"ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில், நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து," (எபேசியர் 4:1) என்பதைக் கேட்கும்பொழுது ஆச்சரியமாக அல்ல, தெளிந்தபுத்தியை உண்டாக்குவதாக உள்ளது. "மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும்.

முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்." (எபேசியர் 5:3,4,8) என்று பவுல் விவரிக்கிறார். இப்படிப்பட்ட நடத்தைகள் எல்லா வழிகளிலும் தேவனுக்கும் குமாரனுக்கும் அவமானத்தை வருவிக்கும் (மதுபானம்

அருந்துவது, தவறான பழக்கவழக்கங்கள் உண்மையில்லாத காரியங்கள்) கிறிஸ்தவ விசுவாசத்தைப் பரியாசம் செய்வதற்கு இந்த உலகம் மிக கவனமாய் சாட்சிகளைத் தேடிக் கொண்டிருக்கிறது.

**நீதிமன்றத்தின் பணி**

சட்டப் பூர்வமாக நீதிமன்றத்திற்கு ஒரு கிறிஸ்தவன் அழைக்கப்பட்டால் அல்லது தீர்ப்பு சொல்லும் நீதிபதியாக பணிபுரிய வேண்டி இருந்தால், அவர்கள் தேசத்தின் சட்டத்தை மதித்து, கிறிஸ்துவுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்ததை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். "துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும், ஒருவனையும் தூஷியாமலும், சண்டைப்பண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு." (தீத்து 3:1,2) ஒரு கிறிஸ்தவர் தன்னுடைய தனிமனித உணர்வுகளை அனுமதிக்கக்கூடாது."சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது." எபேசியர் 4:31 "அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,"1கொரிந்தியர் 13:5 என்ற கோட்பாட்டை நாம் ஒவ்வொருவரும் எல்லா நேரங்களிலும் கட்டாயமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

நீதிமன்றத்தில் வழக்கின் தீர்ப்பைக் கொடுக்கும் பணியானது, மற்றவர்களை நியாயம் தீர்க்கக்கூடாது என்ற கிறிஸ்துவ பொறுப்புகளுக்கு எதிராகத் தோன்றலாம். (மத்தேயு 7:1) நீதிமன்றங்களில் உண்மையின் அடிப்படையில் எடுக்கப்படும் முடிவுகளுக்கும் இயேசு சொன்ன நியாயத்தீர்ப்புக்கும் முக்கியமான வித்தியாசம் உண்டு. மற்றவர்கள் தேவனிடத்தில் வைத்திருக்கும் பக்தியைக் குறித்து ஒரு கிறிஸ்தவன் குற்றம் கண்டு பிடிக்கக்கூடாது. தங்களையோ, மற்றவர்களையோ மாதிரியாகக் கொண்டு மாய்மாலம் செய்வதை கிறிஸ்தவர்கள் தவிர்க்க வேண்டும். (11கொரிந்தியர் 13:5)

ஒரு காரியத்தைக் கேட்பதினால் மட்டும் அல்ல, தகுந்த ஆதாரத்தோடு ஒருவரை நியாயம் விசாரிக்க வேண்டும் என்று இயேசுவும், பவுலும் கடுமையாக எச்சரிக்கிறார்கள்.

" ஆடுகளை ஓநாய்நாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்;

ஆகையால், சர்ப்பங்களைப் போலவினாவுள்ள வர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்." (மத்தேயு 10:16)

நாம் ஒவ்வொருவரும் முழுமையாக நிறைவுபெறவேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் தங்களுடைய சிந்தையில் முழு நிறைவோடு இருப்பது அவசியம். இதற்கு அறிவும், கிருபையும் தேவைப்படுகிறது. நல்ல சிந்தையில் உள்ள ஆவிக்கு ஏற்றவாறு கிரியைகள் இருக்கவேண்டும். என்ற கோட்பாடுகளை நாம் கடைபிடிப்பதற்கு (1திமோ1:7)

நாம் உலகத்தார் அல்ல என்பதை தொடர்ந்து நினைவில் கொள்ளவேண்டும். "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல் நீ அவர்களை தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். நான் உலகத்தான் அல்லாதது போல அவர்களும் உலகத்தார் அல்ல" (யோவான் 17:15,16)

இக்காலத்து பாடுகளை அனுபவிக்க வேண்டும் என்று தேவன் மனுஷருக்கு நியமித்திருக்கிறார். (1 கொரி 7 :26) ஆகவே என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் போருட்டு இவைகளை உங்களுக்கு சொன்னேன், உலகத்தில் உங்களுக்கு உபவத்திரமும் உண்டு. ஆனாலும் திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்." (யோவான் 16:33) என்று இயேசுவின் வார்த்தைகளை ஒரு கிறிஸ்தவன் நினைவில் கொள்ளவேண்டும். தேவனுடைய மற்ற கற்பனையை மதிப்பது போல "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும் தேவனுடைய மாசற்ற பிள்ளைகளும்மாய் இருக்கும் படிக்கு......" (பிலி 2:15) தேவனோடு நாம் கொண்டுள்ள தொடர்பை மறந்து விடக்கூடாது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் தேவனை மகிமைபடுத்தும்படியாக நம்முடைய வெளிச்சத்தை பிரகாசிக்க கடவோம்

# பூரணப்பட்ட கிறிஸ்தவரின் சித்திரம்



*"எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். சகோதரர் எல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்." -1தெசலோனிக்கேயர் 5:16-22*

இந்த சுவிசேஷ யுகத்தில் உடன்படிக்கை செய்தவர்களுக்கு முன்பாக தேவன் அமைத் திருக்கும் உயர்ந்த நிலையை, இறுதிகாலத்தில் வெளிப்படுத்துவதற்காகஅப்போஸ்தல நிருபங்களின் பெரும்பாலான பகுதி குறிப்பிடுகிறது. மேலும் இந்த அழைப்பை ஏற்று பரிசு பெறும்படியாக அதில் ஓடுபவர்கள், அவர்களின் வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டிய காரியங்களை இந்த நிருபங்கள் நினைப்பூட்டுகிறது. தெசலோனிக்கேயாவிலுள்ள கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு பவுல் எழுதின நிருபத்தில் இதை குறித்து உண்மை என்று காணலாம்.

மிகப்பெரிய சத்தியங்கள் தலைக்குள் செல்லலாம். அதை புரிந்துகொள்வதற்கு மிகுந்த ஞானமும் பெற்றிருக்கலாம். இருந்தபோதிலும், இப்படிப்பட்ட சத்தியம் வாழ்க்கையில் எந்த விதத்திலும் பயனளிப்பதில்லை. இப்படிப்பட்ட நிலைகளில், கோளாறாகக் காணப்படுவது சத்தியங்களினால் அல்ல. மாறாக அதை பெற்றுக் கொள்பவர்களின் அபூரண நிலையினாலேயே ஆகும். ஆகவே அற்புதமான சத்தியங்கள் நன்மையான கிரியைகளை வெளிப்படுத்தாவிட்டால் அதை பெற்றுக் கொள்ளுகிறவர்களின் அனுதின வாழ்க்கையில் எந்தவிதமான ஆவிக்குரிய வளர்ச்சியும் இல்லா விட்டால், அவர்கள் எந்தவிதத்திலும் தங்களுடைய சித்தத்தை விட்டுக் கொடுக்காமல் தங்களை மீட்பதற்காக ஈட்டுக்கிரயத்திற்கு தன்னுடைய ஜீவனையே ஊற்றினவருக்கு தாங்கள் முழுமையாக ஒப்புக்கொடுக்கவில்லை என்று நியாயமான முடிவுக்கு வரலாம் .

"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்." (1கொரிந்தியர் 6:19, 20)

**தேவனோடு நெருக்கமாக ஐக்கியப்பட்டவரின் விவரம்**

நாம் உண்மையில் நம்மை அர்ப்பணித்திருக்கிறோமா இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்கு பரலோக அழைப்பை உறுதிபடுத்துவது மட்டும் அல்ல, ஆனால், இந்த ஆசீர்வதிக்கப்பட்ட வசனங்களில் உள்ள சத்தியம் நம்முடைய இருதயத்திலும், வாழ்க்கையிலும் எப்படிப்பட்ட மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்று நாம் கவனிக்கவேண்டும். மற்ற நிருபங்களைப்போல தெசலோனிக்கேயாவுக்கு எழுதின நிருபத்திலும் "கிறிஸ்து இயேசுவுக்கு தேவன் அழைத்த பரம அழைப்பு" மற்றும் கிறிஸ்தவர்களுக்குரிய பரலோக நம்பிக்கையைப் பற்றி அதிகமாய் பேசப்படுகிறது. "எப்போதும் மகிழ்ச்சியாயிருங்கள்" என்ற வார்த்தை இந்த நிருபத்தின் முடிவில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஒரு முக்கிய கற்பனைகளில் முதலில் சொல்லப்படும் காரியமாகும். இவைகளை நாம் கூர்ந்து கவனிக்கும்போது அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் குணாதிசயங்களை இவைகள் விவரிக்கக் கூடியவைகளாய் இருக்கிறது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் கிறிஸ்து இயேசுவுக்குள் பூரணப்பட்ட மனுஷனின் சித்திரத்தை மிக துல்லியமாக இந்த ஏழு குணாதிசயங்கள் காட்டுகிறது.

அப்போஸ்தலர் குறிப்பிட்ட இந்த ஏழு குணங்களும் ஒரு சங்கிலிக்கு ஒப்பிடலாம். இந்த சங்கிலியின் ஒரு சின்ன தொடர்பு விட்டுப்போனாலும் அதை சரிபடுத்தும் வரையில் அது பயனற்றதாயிருக்கும். அப்போஸ்தலர் சொல்லிய இந்த அறிவுரைகள் நடைமுறையில் மட்டுமல்ல என்றுமே அவைகள் தவிர்க்க முடியாததுமாய் உள்ளது. வெளிச்சத்தின் நாட்களிலும் மந்தமான நாட்களிலும், ஒருவரின் வெளிச்சமான வாழ்க்கை சாட்சிகளினாலும், அல்லது இருளான வாழ்க்கை சாட்சிகளிலும், சமாதான நேரங்களிலும் மற்றும் உபத்திரவங்களின் காலங்களிலும், இருதயம் கட்டப்பட்டு துக்கித்து சாத்தானின் சோதனை நாட்களிலும் - பூரணமான இந்த கிறிஸ்தவன் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருந்து இடைவிடாமல் ஜெபித்து ஆவியை அவித்துப்போடாமல் தீமையாய் தோன்றுகிற சகல காரியங்களையும் விட்டுவிலகி, எல்லாவற்றிற்காகவும், கிறிஸ்துவின் மூலமாக தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்பார்கள். இந்த அனைத்து குணாதிசயங்களும் இணைந்ததே தேவனோடு ஐக்கியமாயிருக்கும் மனுஷன் இப்படிப்பட்ட குணங்கள் வளருவதற்காக எடுக்கப்படும் முயற்சிகளில் தேவன் பிரியப்படுகிறார். தன்னுடைய சொந்த தகுதியின்மையையும், குறைபாடுகளையும் ஆழ்ந்து உணரக்கூடிய ஒருவரைப் பற்றியே இந்த குணாதிசயங்கள் விவரிக்கப்படுகிறது. இவை எல்லாவற்றிலும் கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் தெய்வீக

ஏற்பாடுகளைப் புரிந்து கொண்டவர்களாய் முழுமனதோடு அவரை ஏற்றுக்கொண்டு எண்ணிலடங்காத தேவனுடைய அன்புக்கும் பரிவுக்கும் ஐக்கிய முள்ளவர்களாய் அவரோடுகூட தொடர்பு கொள்கிறார்கள்.

## எப்போதும் மகிழ்ச்சியாய் இருங்கள்

இந்நேரத்தில் நாம் எடுத்துக் கொண்ட கிறிஸ்தவ சித்திரத்தின், "எப்போதும் மகிழ்ச்சியாயிருங்கள்" என்பதே முதல் அம்சமாயிருக்கும். உண்மையான கிறிஸ்தவம் மந்தமான காரியம் அல்லது அழுத்தப்பட்ட மனநிலையை அல்ல என்று முதல் குறிப்பாக நினைவு கூறப்படுகிறது. தூய்மையான கிறிஸ்தவன் இந்த உலகத்தின் தீமையான காரியங்களில் இருந்து மட்டும் விலகியிராமல், நியாயமானதாகக் கருதப்படும் உலக சிற்றின்பங்கள், ஈடுபாடுகள் மற்றும் களியாட்டுகளில் இருந்தும் ஒரு குறிப்பிட்ட எல்லை வரை விலகியிருக்க வேண்டும். இனிவரக்கூடிய நித்திய மகிழ்ச்சிக்காகவும் நிரந்தர சந்தோஷத்திற்காகவும் இந்த தற்காலிகமான சந்தோஷங்கள் விட்டுக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, நித்திய மகிழ்ச்சியைப் பெருவதே இதன் நோக்கமாகும்.

ஒரு கிறிஸ்தவன் எதையெல்லாம் விட்டுக் கொடுத்தாலும், உண்மையான ஆவிக்குரிய மகிழ்ச்சியை அவர் இழப்பதில்லை. ஒரு கிறிஸ்தவன் சாத்தானின் சோதனைகளுக்கும், உபத்திரவங்களுக்கும் விதிவிலக்கல்ல ஆனாலும், எல்லாவிதமான சூழ்நிலையிலும் தம்முடைய இருதயத்திற்குள்ளான மிகப்பெரிய நோக்கத்தை அறிந்து அவரை எல்லா சோதனைகளிலும், மீட்டெடுக்கும் ஒருவர் அவரோடுகூட இருப்பதினால் சகல உபத்திரவங்களையும் பொறுமையோடு சகித்துக் கொள்வதற்கு சாத்திய மாகிறது. இந்த பூமிக்குரிய சகல அனுபவங்களும், தனக்கு எதிராய் நடப்பதைப் போல் தோன்றினாலும் சகல காரியங்களும் கிறிஸ்துவின் சாயலை அணிவதற்காக அனுமதிக்கப்படுகிறது என்று அவர் அறிந்திருக்கிறார். ஆகவே, நித்திய கனமகிமைக்காக படக்கூடிய இக்காலத்துப் பாடுகள் மிக லேசாய் தோன்றுகிறது. ஏனெனில், காணக் கூடிய உலகப் பொருட்களின் மேல் தன்னுடைய நோக்கத்தை வைக்காமல் காணாத நித்திய மகிமைக்காக அவர் காத்துக் கொண்டிருக்கிறார். ஆகவே, ஒவ்வொரு காரியங்களிலும் கர்த்தர் நமக்காக யாவையும் செய்த முடிப்பார் என்ற விசுவாசத்தை வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்புகளைப் பயன்படுத்தி தேவனுடைய கிருபைக்கும், கிறிஸ்துவின் வல்லமைக்கும் சாட்சி பகர்கிறார். "ஒரு கிறிஸ்தவனின் அன்றாட வாழ்க்கையில் உள்ள சோகமான காரியங்கள் - நித்தியமான பரலோக வெளிச்சத்துக்கு வழிநடத்தும்.

இன்று கிறிஸ்தவர் பெயரிலிருக்கும் பெரும்பாலானோருக்கு தேவனோடு நெருங்கி வாழக்கூடிய ஐக்கியம் ஒரு பிராயச்சித்தம் போல தோன்றுகிறது. தேவனுடைய வார்த்தைகள் இப்படியாக விவரிப்பதில்லை, மாறாக, மிகச்சிறப்பான வாய்ப்பு என்றும், உயர்ந்த ஆசீர்வாதம் என்றும் விவரிக்கிறது. ஆசீர்வாதங்கள் நம்பிக்கைக்குரியதாக இராவிட்டால், எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள் என்ற வேண்டுதலை கிறிஸ்தவர்கள் நிறைவேற்ற முடியாது. ஆகவே, இனி வரக்கூடிய வாழ்க்கை மற்றும் நம்பிக்கையை விட்டு ஒரு கிறிஸ்தவ ஜீவியம் பிரிந்து செயல்படமுடியாது. எவ்வளவுக்கு எவ்வளவு இந்த அடிப்படையான நம்பிக்கை உறுதியாக கைப்பற்றப்படுகிறதோ, அந்த அளவுக்கு வாழ்க்கையில் உண்மையும், சகல சூழ்நிலைகளிலும் மகிழ்ச்சியாயிருப்பதற்கு மனமாற்றப்படுகிறது. இந்த நம்பிக்கை விருப்பத்தை மட்டுமல்ல ஏற்றக்காலத்தில் உறுதியான எதிர்பார்ப்புகளையும் கொண்டிருப்பதினால், சோதனைகளில் கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியாயிருப்பதற்கு வழிவகுக்கிறது. கசப்பான வேதனைகளிலும், கடவுளுக்கு மகிழ்ச்சியாயிருக்கக் கூடும். நம்பிக்கை என்பது அனைவரிடத்திலும் காணப்பட்ட போதிலும், இந்த உலகத்தின் ஜனங்கள் தேவனுடைய அன்பு தங்களுக்காக வெளிப்படுத்தப்பட்டது என்பதை உணராததினால், அவர்களின் கண்ணீருக்கு பின் என்ன சம்பவிக்கும் என்பதை அறியாதிருக்கிறார்கள். ஆயினும், பூமிக்குரிய வேதனைகளையும் அவர்கள் கடந்து செல்கிறார்கள்.

## என்னுடைய சந்தோஷம் உங்களில் தங்கியிருப்பதாக

கிறிஸ்தவ வாழ்க்கை, தயக்கமான பலிகளைச் செலுத்துக்கூடிய ஜீவியமல்ல, மாறாக, மனபூர்வமாய், மனமகிழ்ச்சியோடு முழு சித்தங்களையும் அர்ப்பணிக்கக்கூடிய வாழ்க்கையாக இருக்கிறது. இந்த உபத்திரவங்கள், பிரச்சனைகள், சோதனைகள் மற்றும் வேதனைகளுக்கு மத்தியில் எதிர்த்து நிற்பதே கிறிஸ்தவர்களின் மகிழ்ச்சி அல்ல, இவைகளுக்கு பதிலாக இந்த சூழ்நிலைகளுக்கு மத்தியில் தேவன் தன்னோடு இருக்கிறார் என்ற மகிழ்ச்சி. ஆழமாக தனக்குள்ளிருக்கும் தேவனுக்குள் அவர் மகிழ்ச்சியாயிருக்கிறார். கிறிஸ்துவின் வழியாக தேவனோடு கூட அவர் நல்லுறவு கொண்டிருக்கிறார். ஆகவே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருக்கிறார். பரலோக பிதா திராட்சக்கொடியாகிய தம்மை அதிக கனிகளைக் கொடுக்கும்படியாக களை நறுக்கிவிடுகிறார் என்பதை அவர் நினைவு கூறும்போது அவருடைய சந்தோஷம் மிகுதியாயிருக்கிறது. "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.'' (யோவான் 15:11)

ஒவ்வொருவரும் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்றும், கிறிஸ்து அவருக்கு மூத்த சகோதரன் என்னும் நினைவுகளை ஒருவர் சிந்தையில் வைத்திருப்பதே கிறிஸ்தவரின் சந்தோஷமான வாழ்க்கையின் இரகசியமாகும். மேலும் அந்த தேவன் ஆண்டவராம் இயேசுவின் பிதாவும், தன்னை ஏற்றுக்கொள்பவரும், என்பதை உணர்ந்து தம்முடைய நீதியின் கிரியைகளினால் அல்ல, அவருடைய இரக்கத்தினால் மட்டுமே நம்மை இரட்சித்து, பரிசுத்த ஆவியினால் சுத்திகரித்து வழிநடத்துகிறார் என்பதை முழுமையாய் உணர்ந்து கொள்வதே மகிழ்ச்சியின் இரகசியமாகும்.

இந்த வார்த்தைகள், எவ்வளவு உண்மையாயும் எவ்வளவு ஆச்சரியமுமாய் இருக்கிறது. நீண்ட காலத்திற்கு முன் தம்முடைய அடிச்சுவடுகளை விட்டுச் சென்றவர் கூறும் இவ்வார்த்தைகள் நமக்கு எவ்வளவு ஊக்கமாய் இருக்கிறது."நம்முடைய இருதயங்கள் சுவிசேஷ யுகத்தின் செய்திகள் நிறைந்து மகிழ்ச்சி கொடுக்காவிட்டால் நம்முடைய வாழ்க்கை மந்தமாகவே இருந்திருக்கும். இந்த யுகத்தின் முடிவு ஒவ்வொரு உண்மை கிறிஸ்தவர்களுக்கும் துக்கத்தின் மேல் துக்கம் கொடுத்து, காலங்கள் நிறைவேறும் போது அது உச்சக்கட்டத்தை அடையும் **என்ற உணர்வு** கிறிஸ்தவர்கள் சந்திக்கும் போது மகிழ்ச்சியாக அதை ஏற்றுக்கொள்கிறார்கள். சில அனுபவங்களைக் காணலாம்: வயது செல்லச்செல்ல நாம் அனுபவிக்கும் மகிழ்ச்சிகளின் எல்லைச்சுற்று குறைவாகக் காணப்படலாம்.

"இங்கு கிறிஸ்தவர்களின் மகிழ்ச்சி அடங்கி இருக்கிறது. கிறிஸ்துவின் சுவிசேஷம் தற்காலிகமான மகிழ்ச்சியை அல்லது சந்தோஷங்களை பின்னடையச் செய்து, பல வழிகளில் பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. கடந்தகால மகிழ்ச்சிகளைக் காட்டிலும், இனி வரக்கூடிய பரலோக ஆசீர்வாதங்கள் மிக அதிகமாய் உள்ளது. மனுஷனுடைய பழைய இருதயங்கள், பழைய சந்தோஷங்களில் மூழ்கி கிடந்தாலும், அவனுடைய புதிய இருதயமானது இனி வரக்கூடிய புதிய சந்தோஷங்களுக்கு ஆவலாய் காத்திருக்கிறது. இந்த பூமி எவ்வளவாய் ஈர்க்கக்கூடியதாய் இருந்தாலும் நாம் உண்மையான கிறிஸ்தவர்களாய் இருக்கும் பட்சத்தில் பரலோகத்தின் மகிழ்ச்சி நம்மை வல்லமையாய் இழுத்துக் கொள்கிறது. ஆகவே உண்மையான சந்தோஷத்தைக் கொடுக்க இயலாத இந்த உலகத்தை நாம் பின்னிட்டுப் பாராமல், நமக்கு முன் வெகு தூரத்திலிருக்கும் ஒரு நட்சத்திரத்தைப் பார்ப்பது போல, அதை நெருங்கிக் கொண்டிருக்கிறோம்.

எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள் என்பதில் கிறிஸ்தவர்களுக்கு என்ன சிறப்புரிமை உண்டு? அவருடைய மகிழ்ச்சிக்கு அஸ்திபாரம் என்ன ? எதற்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருக்கவேண்டும்? தனிப்பட்ட முறையில் கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு அநேக காரியங்கள் உண்டு. சோர்ந்து போய் துக்கிப்பதற்கு எந்த ஒரு காரணமும் இருப்பதில்லை. தேவன் கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற இரத்தத்தின் மூலம் மீட்பளித்து, அவருடைய கிருபையின் ஐசுவரியத்தினால் கடந்த காலத்தின் சகல பாவங்களிலும் மன்னிப்பளித்திருக்கிறார். நம்முடைய தேவையின் போதெல்லாம் இரக்கத்தையும் கிருபையையும் பெற்றுக்கொள்வதற்கு, நாம் எப்போது வேண்டுமானாலும் கிருபாசனத் தண்டைக்குச் செல்ல வாய்ப்பளித் திருக்கிறார். நாம் பலவீனரும், குறைவுள்ளவர்களும் அபூரணருமாய் இருந்தாலும் நம்முடைய சோதனைகளை உணர்ந்து கொள்ளக்கூடிய மிகப்பெரிய பிரதான ஆசாரியன் நமக்குண்டு. தேவனுடைய சொந்த ஆவியை நாம் பெற்று நாம் அவருடைய சொந்த பிள்ளைகள் என்று சாட்சியளிக்கிறது. சர்வத்துக்கும் மேலான பிதாவாகிய தேவன் நம்மை சீர்பொருத்தக் கூடிய மிகச்சிறப்பான ஆசீர்வாதத்தைப் பெற்றுள்ளோம். அவருடைய பரிசுத்தத்தில் பங்குபெறுவதற்கு, இப்படிப்பட்ட சிட்சைகள் நம்முடைய நன்மையாக அனுமதிக்கப்படுவது என்பதை அறிந்திருக்கிறோம். இந்த பாடுகளின் மத்தியில் விசேஷித்த பாதுகாப்பைப் பெறுகிறோம் என்பதையும் நாம் நன்கு அறிந்துள்ளோம். நாம் தேவனை நேசிப்பதினால் சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது. இவ்வாறு பிதாவின் நோக்கத்திற்கு ஏற்றவாறு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் பிதாவாகிய தேவன் நம்மை நேசிக்கிறார் என்றும், இயேசு முடிவு பரியந்தம் நம்மை நேசிப்பார் என்றும் அவர் அனுமதியளிக்கிறார்.

## விசுவாசம் வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொள்கிறது

நமக்குள் நற்கிரியைகளைத் துவக்கினவர் இயேசுகிறிஸ்துவின் நாளில் அதை முடிக்கவும் வல்லவராய் இருக்கிறார் என்று பரிசுத்த ஆவியினால் நிறைந்த அப்போஸ்தலன் கூறுகிறார். கிறிஸ்து வினிமித்தம் நாம் உபத்திரவப்படும்போது, நம்முடைய பலன் பரலோகத்தில் மிகுதியாய் இருப்பதை எண்ணி நாம் மகிழ்ச்சி அடையவேண்டும் என்று கற்பிக்கிறார். நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்ற சாட்சியினால் மட்டுமல்ல, கிறிஸ்துவோடுகூட பாடுகள் பட்டால் தேவனுக்கு சுதந்தரவாளிகள் ஆகவும் கிறிஸ்துவுக்கு உடன் பங்காளிகளாகவும் இருக்கிறோம். நாம் இனி ஒருபோதும் மரணத் தீர்ப்புக்குள்ளும் பாவக் கட்டுகளுக்குள்ளும் பயம் என்ற பிடிக்குள்ளும் இல்லை

என்பதை முழுமையாக உணர்ந்திருக்கிறோம். மாறாக, தேவனுடைய ஆவியைப் பெற்றதினால் "அப்பா பிதாவே" என்று அழைப்பதற்கான புத்திரசுவிகாரத்தைப் பெற்றுள்ளோம். நாம் சகோதரர்களை நேசிப்பதினால் மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கடந்து வந்திருக்கிறோம் என்ற சாட்சியைப் பெற்றுள்ளோம். விலையேறப் பெற்ற மிகுதியான வாக்குத்தத்தங்களை விசுவாசத்தினால் பற்றிக்கொண்டு உபத்திரவங்களை மகிழ்ச்சியோடு எதிர் நோக்குகிறோம். தேவனுடைய அன்பு நம்மேல் இருப்பதினால் அவர் கொடுத்த பரிசுத்த ஆவியினால் நம்முடைய இருதயங்கள் நிரப்பப்பட்டதினால் உபத்திரவங்கள் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறது.

எல்லா ஆசீர்வாதங்களிலும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களே மிக உன்னதமானது. விசுவாசத்தினால் இப்பொழுதே நாமும் கிறிஸ்து இருக்கும் உன்னதமான நிலைக்கு உயர்த்தப்பட்டு, அவரோடு கூட அமர்ந்திருக்கிறோம் என்று நமக்குச் சொல்லப்படுகிறது. தேவனுடைய சித்தத்தின் இரகசியங்களை அறிந்துகொள்வதற்கான சிறப்புரிமையை நாம் பெற்றுள்ளோம். பரலோகத்துக்குரியவைகளும், பூமிக்குரியவைகளும் ஏற்ற காலத்தில் கிறிஸ்துவுக்குள் கூட்டிச் சேர்க்கப்படும் என்ற அவருடைய நோக்கத்தை நாம் அறிந்திருப்பதினால் நாம் பாக்கிய முள்ளவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்து தம்முடைய வருகையில் அவர் இருக்கும் இடத்திற்கு நம்மையும் அழைத்துச் செல்வார் என்ற வாக்குத்தததத்தைப் பெற்றுள்ளோம். அப்பொழுது நம்முடைய ஜீவனாய் இருப்பவரை தரிசிப்போம். மேலும் தேவனுடைய யுகங்களைப்பற்றிய அற்புதமான திட்டத்தை நாம் அறிந்து கொள்ள வாய்ப்பளித்திருக்கிறார். முழு மனுக்குலத்தையும் பிதா நேசித்ததினால் தன்னுடைய குமாரனை ஈட்டுக்கிரயமாகக் கொடுத்து, குறித்த காலத்தில் அனைவருக்கும் சாட்சியாக ஏற்படுத்தினார். இக்காலத்தில் பிதாவின் அன்பை உணர்ந்துகொள்ளாத அநேக நல்ல ஜனங்கள், ஏற்ற காலத்தில் அதை அறிந்து, நித்திய ஜீவனை சுதந்தரித்து, அதன் பலனைப் பெற்றுக்கொள்ள அவர்கள் தேவனுடைய திட்டங்களை அறிந்துகொள்வார்கள். நித்திய கனம் பெறுவதற்கான வாய்ப்பை இன்று சபை பெற்றிருப்பது போல, இந்த பூமிக்குரிய மகிமையை பெற்றுக்கொள்வதற்கான நம்பிக்கை, உலக ஜனங்களுக்கு முன் வைக்கப்படும். மேலும் பிதாவினுடைய அன்பிலிருந்தும் நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் அன்பிலிருந்தும் நம்மை எதுவும் பிரிக்க முடியாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

**நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிவேன்**

"எனக்காக இன்னும் அவர் என்ன செய்யக்கூடும்?" என்று ஒருவர் கூறுகிறார். அவர் தம்முடைய வார்த்தையை எனக்குத் தந்து, வழிநடத்தி, என்னைத் தேற்றுவதற்கும் போதிப்பதற்கும் பரிசுத்த ஆவியால் நிரப்பி, என்றும் அழியாத விசேஷித்த வாக்குத்தத்தங்களை எனக்கு சொந்தமாகக் கொடுத்தார். இவைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு - எல்லாம் உங்களுடையது. பவுல் அல்லது அப்பொல்லோ அல்லது கேபா, இந்த உலகம், தற்போதுள்ள காரியங்கள், இனிவரும் காரியங்கள், ஜீவன் அல்லது மரணம் அனைத்தும் உங்களுடையவைகள். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவுக்குள்ளானவர்கள். இவைகளெல்லாம் உங்களுடையது என்று நாம் எப்படி சொல்லலாம். சகல விதமான அகந்தையையும், கர்வத்தையும் என்னை விட்டு நீக்குவதற்காக இந்த உலகத்தின் சகலவித உபத்திரவங்களும் சோதனைகளும் என்னுடையது. சந்தேகம் மற்றும் விரக்தியிலிருந்து என்னை காத்துக்கொள்ள இந்த உலகத்தின் மகிழ்ச்சியும் ஆசீர்வாதங்களும் என்னுடையது. மொத்தத்தில் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கும் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அழைக்கப்பட்டவர் களுக்கும் சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது. பிரமாணங்களில் என்னை சேதப்படுத்துவதற்கு எதுவுமில்லை. என்னுடைய மனதை அழுத்தும்படியாக வேதாகமத்தில் எதுவும் இல்லை. ஆனால் ஒவ்வொரு பக்கங்களிலும் பரலோகத்தில் செய்யப்படும் ஒழுங்குகள் என்னை ஊக்குவித்து மகிழ்ச்சிக்குள்ளாக்குகிறது. மேலும் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள் என்ற அப்போஸ்தலரின் பிரமாணத்தை மகிழ்ச்சியோடு கைக்கொள்ளச் செய்கிறது." விசுவாசத்தின் உறுதி முழுமையான கடமை என்று வேதாகமம் என்றும் கற்பிப்பதில்லை. இது ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட வாய்ப்பு என்று அது கூறுகிறது.

“அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்.ஆயினும்நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.” (2 தீமோத்தேயு 1:12) என்ற வார்த்தைகளை உண்மையான உதடுகளோடு எத்தனை கிறிஸ்தவர்கள் கூறமுடியும் ? மற்றும் சிலர் பரலோகத்தில் இருக்கும் உம்மைத்தவிர இந்த பூமியில் நாம் விரும்பத்தக்கவர் ஒருவரும் இல்லை. என் இருதயமும், மாம்சமும் தோல்வியடையும்போது, என் இருதயத்தின் **பங்குமானவர்,** விசுவாசத்தினால், கிறிஸ்துவினால் இரட்சிப்பு உண்டென்று விசுவாசிக்கப்படுகிறது. இருந்தும், சிலர் கிறிஸ்துவுக்குள் நாம் முன்னதாகவே இரட்சிக்கப்பட்டு விட்டோம் என்று நம்புகிறார்கள்.

வருங்காலத்தில் பெறக்கூடிய நித்திய சுதந்தரத்திற்கான நம்பிக்கையை முழுமையாக

ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் கிறிஸ்தவர்களின் மகிழ்ச்சி எல்லைக்குட்படாமல் பெருகலாம். இந்த மகிழ்ச்சியை நித்தியமாக தக்க வைத்துக்கொள்வதற்கு தேவனிடத்திலிருந்து பெற்ற நன்மைகளை தாராளமாய் மற்றவர்களுக்குக் கொடுக்கவேண்டும்" பெறுவதைக் காட்டிலும் கொடுப்பதே நலம்" என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூர்ந்து செயல்படுத்துவது மிக அவசியம். தேவை பட்டவர்களுக்கு உதவி செய்து வேதனையில் உள்ளவர்களுக்கு ஆறுதல் அளித்து, பலிபீடத்தில் உங்கள் பலிகளைச் செலுத்தும் போது அதில் மேன்மைபாராட்ட இடமில்லை. மாறாக, உங்கள் நித்திய மகிழ்ச்சி அதிகமாகப் பெருகும். அனைவருக்கும் கொடுக்கக் கூடிய தேவனுடைய ஆவியினால் உங்கள் இருதயம் ஊக்குவிக்கப்பட்டு அதிகமாய் கொடுத்தால் இந்த அறுவடையின் மகிழ்ச்சியை இப்பொழுதும் எப்பொழுதும் அதிகமாய் பெற்றுக் கொள்ளலாம். அதிகம் கொடுப்பவர்களே மிகுந்த மகிழ்ச்சியடைகிறார்கள். இது தேவனுடைய மாற்றப்படாத பிரமாணமாகும்.

### கொடுப்பவர்கள் பெறும் ஆசீர்வாதம்

தாகமாயிருப்பவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஒரு கலசம் தண்ணீரும், வேதனையில் இருப்போரை தாங்கள் பார்க்கும் ஒவ்வொரு கனிவான பார்வையும், பசியாயிருப்பவர்களுக்கு நீங்கள் கொடுக்கும் ஆகாரமும், தேவை உள்ளவர்களுக்கு உங்களுடைய உதவும் கரங்களும், மரிக்கக் கூடியவர்களின் காதுகளில் நீங்கள் அறிவிக்கும் ஒவ்வொரு சத்தியங்களும், நீண்ட தூரத்தில் அறியாமையிலுள்ளவர்களுக்கு நீங்கள் அனுப்பும் வசனங்களும் சந்தோஷத்தின் அலைகளாக உங்களிடத்தில் திரும்பிவருகிறது. ஆகவே, நீங்கள் விதைத்ததை நிச்சயம் அறுவடை செய்வீர்கள். கொடுப்பதற்கான ஆசீரை நிச்சயம் ருசி பார்ப்பார்கள். தேவனுடைய பரிசுத்த ஒழுங்கு முறையில் இது மேன்மையும், ஆசீர்வதிக்கப்பட்ட பிரமாணமுமாகும். உங்கள் விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து உங்கள் மகிழ்ச்சியை நீங்கள் அதிகரிக்க முயற்சித்தால், அனுபவத்தின் மூலம் அவர்களை ஊக்குவித்து, எவ்வளவு அதிகமாய் கொடுக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக அவர்கள் கீழ்ப்படிவார்கள் ஆனால், அதே நேரத்தில் உங்களுடைய விருப்பத்தையும் தேவைகளையும். எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருப்பதற்கு நாம் எப்பொழுதும் கொடுக்கக் கூடியவர்களாயிருக்கிறோம்.

தன் நாடு திரும்பி, தன்னுடைய ஜீவனத்திற்குரிய பணத்தை சம்பாதித்து வீடு திரும்பிய ஒரு மனுஷனைப் பற்றிய கதை சொல்லப்படுகிறது. அவர் வீட்டிலும் எந்த வேலை செய்யாமல் இருக்கும்போது அவர் விரக்தி அடைந்தவராய் தற்கொலை செய்ய முயற்சித்தார். ஒரு நாள் நான்கு நாட்கள் உணவு புசியாத ஏழையான ஒரு பிச்சை எடுக்கும் ஸ்திரீயை கண்டபோது ஒரு பணத்தை அவர் கொடுத்தார். உடனடியாக அந்த பெண்ணின் முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சியின் சுடர்கள் இவரின் வாழ்க்கைப் பாதையை மாற்றியது. "பணத்தை கொடுத்து மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக்கூடிய கருவியாக தேவன் என்னை பயன்படுத்தியிருந்தால், இந்த உலகத்தில் நாம் செய்ய வேண்டிய வேலைகள் அதிகமாய் இருக்குமே " என்று அவர் தனக்குள் சொல்லிக் கொண்டு புத்தியடைந்தவராய் வீடு சென்றார்.

நியாயப்பிரமாணத்தின் காலத்தில் குறைவான வெளிச்சமும், வாய்ப்புகளும் பெற்றிருந்த தேவ ஜனங்களின் அனுபவத்தை வேதாகமம் இப்படியாக விவரிக்கிறது. இவைகளை நாம் வாசித்து பழைய தீர்க்கதரிசிகளின் எளிமையான சிந்தைகளை உண்மையான அனுபவங் களின்றி விசுவாசத்தின் வெளிப்பாட்டையும், தேவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையையும் நாம் புரிந்து கொள்ள முடியாது. தேவனுடைய தீர்க்கதரிசிகளில் ஒருவரின் பூமிக்குரிய சகல காரியங்களும் தன்னை விட்டு விலகி கொண்டிருக்கும் போது,

“அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்.” (ஆபகூக் 3:17,18) என்ற அருமையான வார்த்தைகளை உரைத்தார்.

இந்த வார்த்தைகள் பஞ்சத்தின் நிலைமையையும், பாழ்க்கடிப்பையும் முற்றிலுமாக வறுமையின் திசையையும் இந்த வார்த்தை விவரிக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒரு சராசரி மனுஷன் என்ன சொல்லக் கூடும்? "நான் என்னையே உணர்ச்சியற்றவனாய் ஆக்கிக் கொண்டு ஒரு கல்லைப்போல் இருப்பேன் என்று ஒரு யோகி கூறலாம்." என்னை நான் அழித்துக் கொள்ளவேன்" என்று சராசரி மனுஷன் கூறலாம். "நான் என்னை இதற்கு ஒப்புக் கொடுப்பேன்" என்று ஒரு தத்துவ ஞானி கூறலாம். ஆனால் தேவனை அறிந்து அவர் மேல் விசுவாசம் வைத்திருக்கும் முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவன் "நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிக் கூறுவேன்" என்று மகிழ்ச்சியுடன் அறிவிப்பார்.

**மற்றவர்கள் துக்கிப்பது போல நாமும் துக்கிக்க கூடாது**

இந்த வார்த்தைகளில் விவரிக்கப்பட்டதைக் காட்டிலும் அதிகமான சோதனைகளில் நீங்கள் உபத்திரவப்பட்டிருந்தால், ஒருவேளை நீங்கள் விரும்பிய ஒருவர் இந்த பூமியை விட்டு சென்றிருந்தால் நொறுக்கப்பட்ட மனித இருதயத்தின் துக்கத்திற்கும், பாரத்திற்கும் தடைசெய்ய ஒருவராலும் கூடாது. இனி அவர்களுக்கு இந்த உலகத்தில் அதை காட்டிலும் மகிழ்ச்சி தரக்கூடியது ஒன்றுமில்லை என்ற சூழ்நிலையில் அவர்களால் இந்த பிரிவை தாங்க முடியாதே. நம்முடைய துணைவர் நம்முடைய பகுதியாய் இதுவரைக்கும் வாழ்ந்தவர் மரிக்கும் போது நம்முடைய இருதயங்கள் நொறுக்கப்பட்டு கண்களால் நீர் தாரைகள் வழியும் போது நாம் மகிழ்ச்சியாய் இருக்கக் கூடுமா ? ஆம், உண்மை கிறிஸ்தவர் மகிழ்ச்சியாய் இருப்பார்கள். ஏனெனில் கசப்பான உலக அனுபவங்களிலிருந்து நித்திய சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பெற்றுக்கொள் வதற்காக அமைதியான இடத்தில் இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று உணர்ந்த கிறிஸ்தவர்கள் அவருடைய இழப்பை பெரிதாக எண்ணாமல் புதிய எருசலேமாகிய தேவனுடைய நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கு அவர் ஆயத்தப்பட்டு விட்டார் என்று எண்ணிக் கொள்வார்கள்.

நாம் மீண்டும் சந்திப்போமா என்ற நிச்சயமில்லாமல் இந்த உலகத்தில் நேசிக்கப்பட்ட நம்முடைய நெருங்கிய நண்பர்களிடமிருந்து பிரியும் போது பிரியா விடை கொடுத்து செல்கிறோம். ஆனால் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களை விட்டு பிரியும் போது கொஞ்சக்காலத்தில் மீண்டும் அனைவரும் ஒன்றுசேர்ந்து நித்தியத்திற்கும் கூடி வாழ்வோம் என்ற நம்பிக்கை உண்டு. ஒரு வேளை நம்மை விட்டு பிரிந்தவர் ஒரு கிறிஸ்தவராயிராதபோதிலும் தேவன் இன்னும் ஒரு நம்பிக்கை வைத்துள்ளார். இவர்கள் இயேசுவுக்குள் மரித்திருக்கிறார்கள். மரித்த இவர்களை தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் இவர்களை முன்னதாகவே விலைக்கு வாங்கி விட்டார். குறித்த காலத்தில் பரம தேசத்தில் எழும்பி தேவனுடைய மிகுந்த அன்பை கற்றுக் கொள்வார்கள். இக்காலத்து குழப்பமான உபதேசங்களிலிருந்தும், பலவகையான போதனை களிலிருந்தும் அவர்கள் நீங்கி இருப்பார்கள்.

ஆனால், நாமனைவரும் கொடூர ராட்சதனாகிய மரணம் என்னும் சத்துருவை முகமுகமாய் சந்திக்க வேண்டும். இந்த இருளான நேரத்திலும் கிறிஸ்தவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். அதே போல் நாமும் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு கிறிஸ்தவம் போதிக்கிறது. விசுவாசம் உள்ளவர்கள் இந்நேரத்தை உணர்ந்து தங்களுடைய ஜீவனும் சரீரமும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட நேரம் வந்தது என்பதை உணர்ந்து கொள்வார்கள். ஆலயம் உடைந்து தெய்வீகப் பணி முடிவுக்கு வந்ததை அறிந்து கொள்வார்கள். தேவன் குறித்த காலத்தில் மரணத்தை ஜெயமாக வென்று பரத்திலிருந்து அழியாமையை பெற்றுக் கொள்ளுவோம் என்ற நம்பிக்கையில் உறுதியாக இளைப்பாறலாம். இந்த கொடூரமான எதிரியான மரணம் கிறிஸ்தவர்களைப் பொருத்தவரைக்கும் பயங்கரத்தை எதிர் நோக்காமல் பிரகாசமுள்ள மகிழ்ச்சியாக வரவேற்கப்படுகிறது. மரணத்தில் ஒரு கிறிஸ்தவன் ஏன் மகிழ்ச்சியாய் இருக்க கூடாது? தன்னை மிக அருமையாக வழி நடத்தினவர்களையும், தம்முடைய பரலோக பிதாவையும் நேசிக்கப்பட்ட ஆண்டவரும், இரட்சகருமான இயேசுவை சந்திப்பதற்காக அவர் செல்கிறாரே.

ஆகவே, நீங்கள் ஒரு உண்மை கிறிஸ்தவரானால் மகிழ்ந்து களிகூருங்கள் , இப்படி செய்வீர்களானால் உங்களை அழைத்தவருக்கு மகிமை சேர்க்கக் கூடியவர்களாய் இருப்பீர்கள். உண்மையில், நீங்கள் தேவனுக்குக் கடன் பட்டிருந்தவர்களானால் உங்கள் இரட்சகர் உங்களை சந்தோஷமாய் வைத்திருக்கிறார் என்பதை இந்த உலகத்திற்குக் காட்டுங்கள். இந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியையும், சந்தோஷத்தையும் கொடுக்கக்கூடிய நித்திய ஜீவன் ஊற்றிற்கு சிலரை நீங்கள் இவ்வழியில் அழைத்துவரலாம்.

**வேத மாணவ ஐக்கிய சபை,**
**சங்கிலியாண்டபுரம் கிளை, திருச்சி.**
**Cell : 9244611241, 9688975724**